விக்ருதி ௵ புரட்டாசி ௴

ஸம்புடம் - 9
ஸஞ்சிகை - 9

287

ஸ்ரீ:

# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

ஸம்பாதகர்:

P. S. ஸ்ரீநிவாஸ தேசிகாசார்யர், M.A., B.L., சிரோமணி.
(அட்வொகேட்)

:ப்ரசுரிக்குமிடம்:

நெ. 2, ஆதியப்ப முதலி தெரு, புரசைவாக்கம்,
சென்னை—7.

September 1950
Vol. 9 No. 9.

## விஷய ஸூசிகை


| | | பக்கம். |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் ... ... | 262 |
| 2. | பஞ்சாங்க ஸங்க்ரஹம் ... ... ... | 266 |
| 3. | நற்போதுபோக்கு ... ... ... | 267 |
| 4. | ஸ்ரீதேசிகன் ஸ்ரீஸூக்திகள் ... ... | 272 |
| 5. | ஸங்கல்ப மஹோத்ஸவம் ... ... | 276 |
| 6. | ஆஸ்திக்யம் ... ... ... | 287 |
| 7. | செய்திகள் ... ... ... | 291 |
| 8. | ஸம்பாதகரின் குறிப்புகள் ... ... ... | 294 |


## நமது வாசகர்களுக்கு

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா வாசகர்கள் க்ருபை செய்து பத்ரிகையின் முதல் பக்கத்திலுள்ள ஸ்ரீ அழகிய சிங்கரின் ஆசாஸந அநுசாஸங்களைப் பார்க்கவேண்டும். இந்தப் பத்ரிகையும் ஸ்ரீ மஹா லக்ஷ்மியும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய திருவடிகளில் பக்தியுள்ளவர்களின் க்ருஹங்களிலெல்லாம் எப்போதும் விளங்கவேண்டுமென்று ஸ்ரீ அழகிய சிங்கரின் திருவுள்ளம்.

ஸ்ரீ அழகிய சிங்கருடைய இந்த அபிஸந்தியை நிறைவேற்றிவைத்து அவருடைய அநுக்ரஹத்திற்குப் பாத்ரமாக வேண்டியது எல்லாருடைய கடமையுமாகும். ஆகையால் நமது வாசகர்கள் ஒவ்வொருவரும் ஆஸ்திகர்களாயுள்ள தமது நண்பர்களிட மெல்லாம் இந்தப் பத்ரிகையைப் பற்றிக் கூறி அவர்களை இதற்குச் சந்தாதாரர்களாகச் சேர்த்து வைப்பது தமது கடமையென நினைத்து அவ்வாறு செய்து வைக்க வேண்டும். இன்னும் செல்வாக்குள்ளவர்க ளெல்லாம் விளம்பரங்களுக்கு ஆர்டர்களை ஸம்பாதித்துக் கொடுத்து உதவ வேண்டும். **1950**வரு முடிய சந்தாத் தொகையைச் செலுத்தாதவர்கள் பெரிய மனதுபண்ணித் தங்கள் சந்தா பாக்கியை உடனே அநுப்ப வேண்டுமென ப்ரார்த்திக்கிறோம்.

இப்பத்ரிகையை இன்னும் அமோகமாக அபிவ்ருத்திக்குக் கொண்டுவர வேண்டுமென்று ஸ்ரீ அழகிய சிங்கருடைய ஸங்கல்பம். இதைக் கார்யத்தில் நிறைவேற்றி வைக்க எல்லா ஆஸ்திகர்களுடைய உதவியையும் எதிர்பார்க்கிறோம்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



# ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா


| ஸம்புடம் 9 | விக்ருதி ௵ புரட்டாசி ௴ | ஸஞ்சிகை 9 |
|---|---|---|


"𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍𑌕𑌲𑍍𑌪𑌿𑌤 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌃 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥"

———— :o: ————

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑍍𑌭𑍂𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥
𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌕𑍋𑌟𑍀𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

(9-ம் அங்கம்)

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

இதனையும் நன்கு கவனிக்கவேணும்.

" ஸம்ஸாராவக்ரஹஜ்வலநதப்தஸஞ்ஜீவநாஹ்வா
யஸ்யா வர்த்திஷ்ணு தஹவா யாய ஜனா மிஸ்ரேம:।
கம்பீரஸ்வாது சுத்த திவ்யதீர்த்தாவவஹா
கம்போ ந்யா வாஸுதேவ் மாஹாத்ம்ய விஷ்ணுபக்தி:।"

'ஸம்ஸாராக்நிவிதீப்த நவ்ய தவப்ராணாத ஸஞ்ஜீவிநீம்' என்ற ஸ்ரீ பாஷ்ய மங்கள ச்லோகத்தை ஸ்வாமி இங்கே முதலடியில் நினைப்பது திண்ணம். விஷ்ணு பக்தி இங்கே கங்கைக்கு ஒப்பிடப்படுகிறது. பகீரதன் உக்ர தவம் செய்து கங்கையைக் கொண்டுவந்து கபிலர் என்னும் வாஸுதேவனிடம், அபராதத்தால் சாம்பலான தன் பித்ருக்களான ஸகர புத்ரர்களைக் கரையேறச் செய்தான். இங்கே வாஸுதேவரின் ஆஜ்ஞையை மீறுவதால் ஸம்ஸாரக் காட்டுத் தீயில் கொளுத்தப்படுபவரை, இந்தப் பக்தி கங்கை ஸம்ஸாரத்தின் அக்கரையையே அடைவிக்கிறது. அந்தக் கங்கையிலும் இந்தப் பக்தி கங்கை சிறப்புற்றதென்று வ்யதிரேகம். மிக்க தவத்தினால்தான் மாதவ பக்தி ப்ரவஹிக்கும். விச்வாசார்யரான ஈச்வரர் கங்கையை சிரஸ்ஸில் தரித்து நீராடி மங்களரானார். [கிரி சர்] வேத வேதாந்த வாக்குகளில் ஸர்வஜ்ஞர் கிரீசர். இந்த பக்தி ப்ரவாஹமும் மிக்க ஆழமும் தெளிவுமானது. இந்தப் பக்தி நதியில் அநேக துறைகள்; அல்லது இறங்கி நீராடும் கட்டங்கள் பல உண்டு. தீர்த்தம் என்பது குருக்களையும் சொல்லும். அநேக வித்யைகளான துறைகளுமுண்டு. புருஷன் என்னும் ஸமுத்ரத்தில் கங்கையைப்போல் பக்தி வெள்ளமான ஓர் விலக்ஷண கங்கை ப்ரவேசிக்கிறது. இங்கே புருஷன் என்பது ஜீவனைக் குறிப்பது. இவனுள் நுழைந்து இவனையும் சேர்த்து இழுத்துக்கொண்டு மஹாபுருஷனாகிய பரமனுக்குள்ளும் நுழையும். மேல் அங்கம் 9-வது ச்லோகத்தில் அது தெளிவாக வர்ணிக்கப்படுகிறது.

சாந்தம் என்னும் ஒரு (ப்ரஹ்ம) ரஸத்தை மட்டும் ஜ்ஞானிகள் சரணம் பற்றினாலும், விஷ்ணு பக்தி அவர்களுக்கு மற்ற ரஸங்களையும் போஷிக்கின்றதாகச் சொல்லலாம். அது எப்படி என்றால்:—

" ஜுகுப்ஸாம் தேஹாதௌ விஷயரஸஹேதோஷு ஹஸநம்
ப்ரகோபம் நிஷ்ப்ராதௌ பாபா ஷ்வாதாசிஷு பயம்।
சுசம் யோகாஹே ஸத்வரிணதௌ விஸ்மயமபி
ப்ரயச்சந்தீ ஸ்ராஹம் தம்ரிதமிர தௌ பஹணிர தி ॥"

'ஶ்ருங்காரமேகம் ரஸமாமநாம:'—'ச்ருங்கார மொன்றையே நாம் ரஸ மென்று கொள்வோம்' என்பர். 'ஏகோ ரஸ: கருண ஏவ நிமித்தபேதாத்'—கருண ரஸ மொன்றே முக்ய ரஸம். மற்ற ரஸங்கள் அதன் பரிணமங்க ளென்று பவபூதி உத்தர ராம சரிதம். 'மிகவும் ஶோகமான பாவங்களை வர்ணிப்பதே உத்தம மதுர கீதிகள்' என்றார் ஒரு ஆங்கில கவி. 'ப்ரஹ்மாநந்தத்தில் மற்ற ரஸங்களும் ஆநந்தங்களும் திவலைக ளென்றும், அதை உபஜீவித்தே யுள்ளன வென்றும் உபநிஷத் கூறுகிறது. 'ரஸோ வை ஸ:' [அவனே ரஸம்; அவன் ரஸமே] என்று தித்திரிகள் கீதம். ஶாந்த ரஸத்தின் ஸித்தியில் மற்ற எல்லா ரஸங்களும் போஷிக்கப்படுகின்றன வென்பதை இங்கே மிக அழகாக நிரூபிக்கிறார். தேஹம், அதிலுள்ள ரக்தம், நரம்பு, எலும்பு, மூத்ர புரீஷாதிகள், இவைகளில் (ப்ரஹ்லாதர் கூறியபடி) அருவருப்பு (ஜுகுப்ஸை) முற்றுவது ஶாந்தி ரஸத்தில் சேர்ந்ததே. 8-வது அங்கத்தில், 'வஹ்நிஷ்டம் ஸ்வயமாத்ம த்ரிவிதமலமயம் யோநிபாருஷ்யதூஷிதம்' என்ற ச்லோகத்திலும், அந்த ஸந்தர்ப்பத்தில் இதன் உரை க்ரந்தத்தில் உதாஹரித்து விவரிக்கப்பட்ட ப்ரஹ்லாத ச்லோகங்களிலும், இது விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டது. ஜுகுப்ஸை என்பது பீபத்ஸ ரஸத்திற்கு ஸ்தாயீபாவம். மனதில் நிலையாய் நிற்பது. தேஹத்தை நரகத்திற்கும் காராக்ருஹத்திற்கும் ஒப்பிடுவர். 'ரேதஸ்ஸிக்யோகோऽத' 'யோநேஶ்ஶரீரம்' என்று வைராக்ய பாதமாகிய மூன்றாவது அத்யாயம் முதல் பாத முடிவில் ஸூத்ரகாரர், இரண்டு யோநிகளிலிருந்து தேஹம் பிறப்பதைக் காட்டி, தேஹத்தில் வைராக்யத்தை நிகமநம் செய்தா ரென்ற ரஸத்தை 'யோநிபாருஷ்யதூஷிதம்' என்பதால் இங்கே வ்யஞ்ஜநம் செய்யும் அழகு ரஸிக்கத்தக்கது. உலக ஸுகங்களில் வைராக்யத்தை வற்புறுத்துவதற்கு, எதனால் அந்த இன்பங்கள் அநுபவிக்கப் பட வேணுமோ அந்தத் தேஹத்தின் கோரத்தன்மையையே முதலில் ஸூசிக்கிறார். வ்யாதி யில்லாத ஸ்வஸ்த ஸ்திதியிலும் தேஹம் வெறுக்கத்தக்கதே. வ்யாதிகளும் பீடைகளும் விசேஷமாக அநுபவிக்கப்படுவதால் அக்காலங்களில் அவற்றின் கோரத்தைச் சொல்லவேணுமோ? ஶாகுந்தல நாடகத்தில் 5-வது அங்கத்தில் கண்வ சிஷ்யரான சாரத்வதமிச்ரர், 'அப்யக்தமிவ ஸ்நாத: ஶுசிரஶுசிமிவ' என்கிற ச்லோகத்தில், 'எண்ணெய் தேய்த்துக்கொண்டு ஸ்நாநம் செய்வதற்கு' முன்புள்ள தேஹத்தைப் பார்க்கையில் ஸ்நாநம் செய்திருப்பவனுக்கு வெறுப் புண்டாவது போலவும், ஸ்நாநம் செய்து ஶுசியா யிருப்பவன் அஶுசியா யிருப்பவனைப் பார்க்கையில் ஸ்நாநம் செய்து ஶுசியாயிருப்பவனுக்கு வெறுப் புண்டாவது போலவும், உலக விஷயங்களில் ஆஸக்தி யுடைய நகர ஜனங்களைப் பார்த்துத் தனக்கு வெறுப்பு உண்டாவதாகக் கூறினார். ஸ்நாநம் பண்ணி விட்டால் அந்தத் தேஹம் வெறுக்கத்தகாதது என்று அவர் கூறியதை ப்ரஹ்லாதர் ஒப்பார். தேஹத்திலேயே அடியோடு வெறுப்பு ஆச்ரம ருஷிக்கு மிகவும் தக்கது.

'ஶாந்த ரஸத்திற்கும் ஹாஸ்ய ரஸத்திற்கும் பொருந்துமோ?' என்ற ஶங்கையை வெகு அழகாகப் பரிஹரிக்கிறார். 'விஷயரஸஹோமேஷு ஹஸநம்'—தான் ஏகாந்த விஹாரங்கள் செய்த ரஸங்களைப் போகங்கள் முடிந்த

தும் உண்டாகும் அழுக்குகள் முதலிய தேஹாபாஸங்களைப் பார்த்துத் தானே சிரிக்கவேண்டி வரும். ' போக த்ரவ்யங்களோடு உள்ளே போய் ஸ்நாந த்ரவ்யங்களோடு வெளிவருவர் ' என்று நம் கோஷ்டீபுரம் ஸ்வாமி ஸாதித்தது நினைவுக்கு வருகிறது. இது நிபுணமான ஹாஸ்ய ரஸம். ' க்ரியாவஹாந விரவைவிஷயைரவஹாஸிஃ ' என்று அஸுர குரு சுக்ராசார்யரும் தமது நீதி க்ரந்தத்தில் இதை ரஸமாய் விளக்கினர். கீதையில் 18-வது அத்யாயம் 37, 38, 39 ச்லோகங்களில், பகவான், ஸாத்விக ராஜஸ தாமஸ ஸுகங்களைப் பாடுகையில் விஷயேந்த்ரியச் சேர்க்கையால் முதலில் அமுதம்போல் ஆஸ்வாதித்துப் பின்பு முடிவில் விஷம்போலக் காணப்படுவது ராஜஸ ஸுக மென்றும், முதலிலும் கடைசியிலும் புத்தி மோஹத்திலிருந்து உண்டாவது பின்பும் புத்தி மோஹத்தை யுண்டாக்குவது தாமஸ ஸுக மென்று பணித்ததை யும் இங்கே நினைக்கவேணும். அங்கே ' நித்ராலஸ்யப்ரமாதோத்தம் ' என்று கூறியதற்குப் புத்தியின் தூக்கம் சோம்பல் தவறுதல் இவற்ருல் உண்டாவ தென்றும், பின்பும் நித்ரை ஆலஸ்யம் ப்ரமாதம் இவற்றைக் கிளப்பிவிடுவ தென்றும் பொருள் கொள்ளலாம். இதற்கடுத்த அடியில் ' ப்ரகோபம் நித்ராஞ்ச ' என்று படித்திருப்பதையும் நினைக்கவேணும். தன்னைப் பார்த்துத் தன் அந்தராத்மாவே சிரிப்பதை ' ஹஸேவ ஹஸஹஸந்நிவ ஹஸந்தராத்மா ' என்று 6-வது அங்கத் தொடக்கத்தில் கிழக் கஞ்சுகி மூலமாகக் காட்டினர். விஷயத் திற்கும் விஷத்திற்கும் வெகு தூரம். சாப்பிட்டால்தான் விஷம் கொல்லும்; விஷயங்கள் நினைத்த மாத்ரத்திலேயே கொல்லும். விஷம் தேஹத்தை ஹிம்ஸிக்கும். விஷயங்கள் தேஹத்தையும் ஆத்மாவையும் ஹிம்ஸிக்கும். கீதை 18-வது அத்யாயம் 38-ம் ச்லோகத்தில் விஷயம் விஷம் இரண்டும் அழ காகக் குறிக்கப்பட்டது. விஷய ரஸ போகம் உண்மையில் விஷ ரஸ போஜநம் என்று ஸ்வாமி வ்யஞ்ஜநம் செய்கிருர். ஹாஸ்ய ரஸத்தைத் தன் விஷய ரஸ போகங்கள் விஷயத்திலேயே அநுபவிக்கவேணும். பிறர் விஷயத்தில் ஹாஸ் யத்தை அநுபவிப்பது ஶாந்த ரஸத்திற்கு விரோதம். தன் விஷயத்தில் அநுபவிப்பது அந்த ரஸத்திற்கு மிக அநுகூலம்.

' ப்ரகோபம் நித்ராஞ்ச '—ரௌத்ர ரஸத்திற்கு ரௌத்ர கோபம் ஸ்தாயீ பாவம். ' ப்ர ' என்னும் உபஸர்க்கத்தைச் சேர்த்து ' ப்ரகோபம் ' என்ப தால் மிக்க ரௌத்ரமான கோபம் என்று கூறுவது ரஸம். யார் பேரிலோ இத்தனை ரௌத்ரம்? தன்னுடைய சோம்பல் (ஆலஸ்யம் தந்த்ரீ) நித்ரை, (அதிகத் தூக்கம்) ப்ரமாதம் (அஜாக்ரதை) முதலியவற்றின்பேரில் உக்ரமாய்க் கோபிக்கவேணும். பிறர் பேரில் ரௌத்ரம் ஶாந்தியை யழிப்பது. தன் தோஷங்கள் மீது ரௌத்ரம் ஶாந்தியைப் போஷிக்கும். கோபம் என்பதே கூடாது. ' ப்ரோதஸ்ச வை ம்ருத்யுரஸௌ ப்ரவீமி ' என்ருர் ஸநத்ஸுஜாதர்.

' பரபரீவாதாத்விஷ ஸுயம் '—அயலாரைத் துடுக்காகப் பேசும் கொடுமையிலிருந்து பயப்படவேணும். ' பரீவாதேஷு யே மூகாஃ தேபீவ ப்ரியா மம ' [பிறரைப்பற்றித் தூஷணமே பேசாமல் ஊமையாயிருப்பவன் எனக்கு மிக ப்ரியன்.] பயம் என்பது பயாநக ரஸத்தின் ஸ்தாயீ பாவம். ' ஆதி '

என்பதால் பிறர் சரீர ஹிம்ஸை முதலியதைச் சொல்லுகிறது. சொல்லம்பே எல்லாவற்றிலும் கடூரமானது என்பதைக் காட்டவே முதலில் பருஷ வாதத்தைப் படித்தது.

ஶோகம் யோகபயாஶ்ரயே—கருண ரஸத்தில் துக்கம் அழுகை. பகவத் த்யாநத்தில் விச்சேதம், பிரிதல் வந்தால் ஹோ வென்று அழவேணு மென்றனர் ருஷிகள். யோகம் என்பது நிரந்தர த்யாந நிஷ்டை; மனத்தின் ப்ரதிஷ்டை. பயம் என்பதற்கு அடுத்தாற்போல் யோகத்தின் அஸித்தியைக் கூறுவதால் ‘உதரமந்தரம் குருதே, அத தஸ்ய பயம் பவதி’ என்கிற ச்ருதியும் ஸூசிக்கப்படுகிறது. ‘யாத்ஸோகாநிதாம் ஶோகம்’ என்ற வசநத்தை நினைக்கிறார். ஒப்பாரி வைத்து அழவேணும்.

ஹர்ஷப்ரத விஸ்மயஶ்ரீ — அத்புத ரஸத்திற்கு விஸ்மயம் ஸ்தாயீபாவம். ஆத்ம ஸாக்ஷாத்காரமே பரமாத்புத ஸாக்ஷாத்காரம். அது கிடைக்க ஆரம்பிக்கையில் ‘அத்புதம் அத்புதம்’ என்றே அநுபவம் வரும். ‘ஆஶ்சர்யவத் பஶ்யதி கஶ்சிதேநம்’ என்று பகவானே ஜீவ ஸ்வரூப விஷயத்திலும் அதன் ஸாக்ஷாத்காரம் ஆச்சர்யாநுபவம் தருவதை விளக்கினார். அந்த ச்லோகத்தில் திரும்பவும் திரும்பவும் ஆச்சர்ய பதத்தை ப்ரயோகித்ததும் அதை விளக்குவது. ப்ரஹ்ம ஸ்வரூப ஸாக்ஷாத்காரமான மோக்ஷ ப்ரயோஜந பரிபாகம் பலிக்கையில் அத்புத ரஸத்திற் கெல்லை யுண்டோ? ஸ்ரீ பாகவதத்தில் ‘தமத்புதம்’ என்று கண்ணன் உதயத்தையும், ‘அத்யத்புதம்’ என்று ந்ருஸிஹ்மன் உதயத்தையும் ருஷி வர்ணித்தார். இங்கே 37-வது ச்லோகத்தில்,

“ அத்யத்புதாநந்த ஹூதரூணயிநீ ப்ரஸ்பு²டாபாவதா
ஸத்³ய: ப்ரஸாதநந்ரஹ்ஸநவம் த்வக்தாவயிம் ஶேவதி ”

என்று பாடுகிறார். ப்ரஹ்மத்ருஷ்ணோத்ஸாஹம் துரிதவிஜய:—ப்ரஹ்மத்தைத் தேடிக் காணும் ஆசையில் மிக்க உத்ஸாஹத்தையும் வீரத்தன்மையையும் இந்த ஶாந்தி ரஸம் தரும். தன் தோஷங்களோடு கடும்போர் செய்யும் வீர ரஸ மிது. இந்தக் கடும்போரைத் தானே இந்த ஶாந்தி ரஸ நாடகம் விஸ்தாரமாக வர்ணிக்கிறது. உத்ஸாஹம் என்பது வீர ரஸத்தின் ஸ்தாயி பாவம். ‘துரிதவிஜதி’ யென்பது பாப மென்னும் துரிதங்களை இல்லாமல் செய்வது. யமம் என்னும் யோகாங்க மிது.

ப்ரஹ்மணி ரதி:—ச்ருங்கார ரஸம் ஒன்று பாக்கி யுள்ளது. அதற்கு ‘ரதி சேர்த்தி யின்பம்’ என்பது ஸ்தாயீ பாவம். ப்ரஹ்ம விஷயத்தில் ச்ருங்கார ரஸத்தை அநுபவிக்கவேணும். ரதி யென்பது இரண்டு ப்ரியமய உயிர்கள் சேர்ந்து ஒன்று கூடி அநுபவிக்கும் இன்பம். ஆத்மா பரமாத்மா இவற்றின் ஒன்று கூடல் இன்பம். ஆத்மா ஒன்றேயானால் ரதி கிடையா தென்று ரஸம். உயிர் இரண்டாயிருந்து ஒன்றேயாக ஒன்றவேணும்.

“ ரதிர்வாஸூதரூணா பேரயஸ்ய: பரஸ்பரம் ।
ஸம்யோகஸ்த்யாகம் நித்யம் ஸாக்ஷிணீ ச ஸ்வஹஸ்தி ச ”

என்று கீதையில் பக்தி யோக நிஷ்டர் தம்மை அநுபவிப்பதை வர்ணிக்கையில், '𑌰𑌮𑌨𑍍𑌤𑌿' என்று ஆர்ஷமாக பரஸ்மைபதத்தை ப்ரயோகித்து, இந்தச் சேர்த்தியால் சேரப்படும் பரமாத்மாவிற்கும் இந்தச் சேர்க்கை ரதியுண்டென்று விளக்கினார். இங்கே துஷ்ட விஷய போகங்கள் விரதியைக் கூறி உடனே ப்ரஹ்ம ரதியைப் பாடும் ரஸம் இன்பந் தருவது. இதர விஷயங்களில் விராகமும், பரமன் விஷயத்தில் எல்லை கடந்த ராகமும், ஶாந்தி ரஸத்திற்கு அநுகூலம். ஶாந்தி ரஸம் பரமாத்மாவிற்கும் பரம ஹம்ஸர்களுக்கும் ரதியைத் தருவது. கிழவி அத்தைக் குந்தியும், மரண க்ஷணத்தில் நைஷ்டிகக் கிழவரான பீஷ்மரும், கண்ணனிடம் சுத்தமான ரதியை ஆசைப்பட்டு ப்ரார்த்தித்தார்கள். '𑌪𑌿𑌬𑌤 𑌭𑌾𑌗𑌵𑌤𑌂 𑌰𑌸𑌂' என்று ஸ்ரீ பாகவதாரம்பத்தில் பாடியதற்கு வ்யாக்யாநத்தில் விச்வநாத சக்ரவர்த்தி, '[illegible]' என்று க்ருஷ்ண ரஸம் ஸர்வ ரஸங்களையும் உட்கொண்டது. அந்த ரஸம் பாகவத ரஸம் எனும் பகவத் ரஸம். அது உபநிஷத்தால் ஸர்வ ரஸமென்று வர்ணிக்கப்படுவது. அதை நித்யமும் பருகுங்கள் என்பது கருத்தெனக் கூறினார்.

[தொடரும்]

ஸ்ரீ:

## பஞ்சாங்க ஸங்க்ரஹம்

### விக்ருதி ௵ ஐப்பசி ௴ [1950 ௵ அக்டோபர் - நவம்பர் ௴.]

[தக்ஷிணாயநம், சரத் ருது, துலா ௴.]

| | | | |
|---|---|---|---|
| 17-10—50 | 1உ | செவ்வாய்க்கிழமை | — துலா சுக்ல ஸப்தமி திதி; துலா ரவி 20—58. [இன்று ஸங்க்ரமண தர்ப்பணம்] விஷு புண்யகாலம் |
| 19-10—50 | 3உ | வியாழக்கிழமை | — ஸ்ரீ பொய்கை ஆழ்வார் திருநக்ஷத்ரம்; நவராத்ரி உத்ஸவ சாத்துமறை; மஹா நவமி; ஸரஸ்வதி பூஜை |
| 20-10—50 | 4உ | வெள்ளிக்கிழமை | — ஸ்ரீ பூதத்தாழ்வார் திருநக்ஷத்ரம்; விஜயதசமி |
| 21-10—50 | 5உ | சனிக்கிழமை | — ஸ்ரீ பேயாழ்வார் திருநக்ஷத்ரம்; ஸர்வ ஏகாதசி |
| 1-11—50 | 16உ | புதன்கிழமை | — துலா க்ருஷ்ண ஸப்தமி திதி |
| 2-11—50 | 17உ | வியாழக்கிழமை | — அதிதி |
| 3-11—50 | 18உ | வெள்ளிக்கிழமை | — துலா க்ருஷ்ண அஷ்டமி திதி |
| 4-11—50 | 19உ | சனிக்கிழமை | — துலா க்ருஷ்ண நவமி-தசமி திதி த்வயம் |
| 5-11—50 | 20உ | ஞாயிற்றுக்கிழமை | — ஏகாதசி திதி |
| 6-11—50 | 21உ | திங்கட்கிழமை | — ஸர்வ ஏகாதசி வ்ரதம்; துலா க்ருஷ்ண த்வாதசி திதி |
| 8-11—50 | 23உ | புதன்கிழமை | — ராத்ரி நரக சதுர்த்தசி ஸ்நாநம் |
| 9-11—50 | 24உ | வியாழக்கிழமை | — தீபாவளி; ஸர்வ அமாவாஸ்யை |
| 13-11—50 | 28உ | திங்கட்கிழமை | — ஸ்ரீ மணவாள மாமுனிகள் திருநக்ஷத்ரம் |
| 14-11—50 | 29உ | செவ்வாய்க்கிழமை | — ஸ்ரீஸேனை முதலியார் (விஷ்வக்ஸேநர்) திருநக்ஷத்ரம் |
| 15-11—50 | 30உ | புதன்கிழமை | — துலா சுக்ல ஷஷ்டி திதி. |

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# நற்போதுபோக்கு

[9-வது ஸம்புடம் 7-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர், பள்ளிக்கூட ஆசிரியர், முக்கூர்.]

ஸுசீலா—ஸரி; ஜீவர்கள் அச்சரீரத்தை யடைந்து என்ன செய்தார்கள்?

ஸுகுண—ஜீவர்கள் தங்களுடைய க்ஷேமத்திற்காகக் கொடுத்த சரீரங்களைப் பகவான் விஷயத்தில் உபயோகிக்காமல், ஆற்றைக் கடக்கக் கொடுத்த ஓடத்தைக் கொண்டு அவ்வாற்றின் வழியாகக் கடலில் புகுவாரைப் போல், ஶப்தாதி விஷயங்களில் மிகுந்த ஆசையுடையவர்களாய் ஆனார்கள். பிறகு இவர்களுக்கு ஜ்ஞாநம் உண்டாகவேண்டியதற்காகப் பகவான் வேதமாகிற மூல ப்ரமாணத்தைக் கொடுத்தான். அவ்வேதங்களை அபார்த்தங்கள் பண்ணி உபயோகப்படுத்தாமல் இருந்தார்கள். பிறகு பகவான் தானே நேரில் அவதாரம் செய்து ஜீவர்களைச் சீர்திருத்தவேண்டிப் பூமியில் ராம க்ருஷ்ணாதி ரூபேண அவதாரம் செய்தான். அவதாரம் செய்து வெகுவித கஷ்டங்களை அநுபவித்தான். இவ்வர்த்தத்தைப் பட்டர் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில்,

“ஸர்காதயோஹ்யய: ஸ்வயி ஹிதவபுஷைவ த்வயா நாத நீ ந
ஸ்வாத்மோத்தாநு ஸவீ வயி நயஸ்வம் உபாஸரவஸேந ।
ஸர்ஷேண தோகே ஸ்வஜ ந நீ தக்ஷாயம் விஸஹ்ஸ்
தத்தவண ஆஶ்ரயவிபவ: க்லிஶ்யஸே ரங்கராஜ ”

[இதன் பொருள்:—ஹே ரங்கராஜா! தேவரீர் இஜ்ஜீவாத்மாக்களுக்கு ஶரீரங்களைக் கொடுத்தும் வேதங்களைக் கொடுத்தும் அடிக்கடி ஹிதம் செய்து வந்தாலும், ஜீவாத்மாக்கள் கவனிக்காமல் மறுபடி மறுபடி தம்முடைய ஆத்மாவை நாசமாக்கும் வ்யாபாரங்களில் இழிவதைக் கண்டு துராசையால் அவைகளைச் சீர்படுத்த, வ்யாதியுடன் கூடிய குழந்தையின் க்ஷேமத்திற்காகத் தாய் காரம் கசப்புள்ள கஷாயம் சாப்பிடுவதுபோல், பூமியில் ராம க்ருஷ்ணாதி ரூபேண அவதாரம் செய்து வெகுவித கஷ்டங்களை அநுபவிக்கிறீர்] என்று ஸாதித்தார்.

ஸுசீலா—அவதாரங்களில் பகவான் எவ்வித கஷ்டங்களை அநுபவித்தார்? அதை எனக்கு நன்றாகச் சொல்.

ஸுகுண:—சொல்கிறேன் கேள். அகர்மவச்யனாய், ஸகலருக்கும் ஸர்வ பலத்தைக் கொடுக்கத் தக்கவனாய், ஸர்வ நியந்தாவாய், ஸர்வ ஶேஷியான

பகவான், கர்மவச்யனைப்போல் ஒரு வருஷம் கர்ப்ப வாஸம் செய்தது கஷ்ட மல்லவா ? பிறகு விச்வாமித்ரருடைய யாக ரக்ஷணத்துக்காக அவருடன் 'உஎள ஹ உ-நிஶாடி-உஅூ கிஂகாஎள ஊஉ-வஹீதஎ' என்று சொல்லி, தம்பி லக்ஷ்மணனுடன் கால்களால் நடந்து சென்றது கஷ்ட மல்லவா ? பிறகு ஸீதையை மணம் புரிந்து அவளுடன் அயோத்தியில் வஸிக்குங் காலத்தில் தசரத மஹாராஜன் ராமனுக்கு ராஜ்ய பட்டாபிஷேகம் செய்ய ஆரம்பிக்கும் போது, கைகேயீ 'இராமன் 14 வருடம் காட்டுக்குச் செல்லவேண்டும், பரதனுக்குப் பட்டாபிஷேகம் செய்யவேண்டும்' என்று நிர்ப்பந்திக்க, ராமன் அதை வ்யாஜமாகக்கொண்டு தேவதைகளுடைய ஶரணாகதியைப் பூர்த்தி செய்ய ஸீதையுடனும் தம்பி லக்ஷ்மணனுடனும் ஸகல போகத்தையும் விட்டு, 'தெவநெநவநஂ மஹா' என்று பாதசாரியாய்க் காட்டில் ப்ரவேசித்தது எவ்வளவு கஷ்டம் ? பிறகு காட்டில் அநுபவித்த கஷ்டங்களுக்குக் கணக் குண்டா ? ஸ்ரீ குலசேகரர், பெருமாள் திருமொழி என்னும் தம்முடைய க்ரந் தத்தில் 'வன்றுளினிணை வணங்கி' என்னும் திருவாய்மொழியில் பெருமாள் பட்ட இந்தக் கஷ்டங்களை வெகுவாகச் சொல்லியிருக்கிறார். பட்டரும் ஸ்ரீ குணரத்ந கோசத்தில்,

> " நெத-நி-உதஹஊஹாயிநீ ஜநமி நஹாத-ஂ சுவஉத்ராமதா
> ஜொகெ தநஹிஶாவபொயஶஹிதெ வூாவா விஉஉ-உஂ ஶஹ-।
> கிஷஂ ஶுாவஊ-உாஶுதீஶ உ- வஉஂ விநஹூஹ வாஹொ வநெ
> ஜாதொ யிகஶ-ணாஂ யிமஹ-ய- வயொ ஹாதஞுஉதஂக-ஶழ "

என்று சொல்லியிருக்கிறார். பகவான் இவ்விதம் கஷ்டங்களை அநுபவித்தது எதற்காக ? இஜ்ஜீவாத்மாக்களின் க்ஷேமத்திற்காக வன்றோ ? எவ்வித கஷ்டப் பட்டாவது இவர்களைச் சேர்ப்படுத்தவேண்டியது என்ற எண்ணம் தவிர அவ ருக்கு வேறில்லை. ஆகையால் இவ்வுலகத்தை ஜீவர்களிடத்தில் தயையால், அவன் உண்டு பண்ணினானென்பார்கள். இந்த விஷயங்களை யோசித்துக் கொண்டிருந்தேன். அச்சமயத்தில் நீ வந்தபடியால் உன்னைக் கவனியாம லிருக்க நேர்ந்தது.

ஸுசீலா :—ஸுகுணா! விஷயங்களை உன்னிடம் நன்றாகக் கேட்டேன். இவ்வளவு தெளிவாகச் சொல்கிறவர்கள் உன்னைத் தவிர எனக்கு வேறு யாரும் இல்லை. ரொம்பவும் ஸந்தோஷம். இன்னொரு விஷயம் உன்னிடம் கேட்க வேண்டிய ஆசை யுண்டு. ஆனால் சொல்ல ச்ரமம் உண்டாகுமோ என்று அஞ்சுகிறேன்.

ஸுகுணா :—பகவானுடைய கதையைச் சொல்லும் விஷயத்திலும் கேட்கும் விஷயத்திலும் சிரமம் என்பது உண்டாகுமோ? ஸ்ரீ பாகவதத்தில் 'நக்ஷ-ணாஂ தஹொஉவிஶாயதெ விஶஹஂ கவந-வாஂஹொஜாகு அஹ-தஂ ஹரிகயாஶதழ' என்கிற பரீக்ஷித் மஹாராஜர் வாக்கு கவனத்திற்கு வர வில்லையா? எது இஷ்டமோ அதைக் கேள்; தெரிந்தவரை சொல்லுகிறேன்.

ஸுசீலா :—ஸகி ! கவனத்திற்கு வந்தது. 'ஸ்வம் ஶேஷம் ச' என்கிற ச்லோகத்தின் அர்த்தத்தை விரிவாகச் சொல். அதில் ரொம்ப ஆசை எனக்கு.

ஸுகுணா—சொல்கிறேன் கேள்.

" ஸ்வம் ஶேஷம் ச மாம் கதயஸி த்வமபி கதய கதம் வேதமூர்த்தப்ரமாணாத்
ஸ த்வம் நாதிலிங்க்ய நாஹவவிஹவாஸ் ஶோபி ஸாத்⁴ரவாவ ।
ஸ்வாதந்த்ர்யம் ஸ்வஸ்ய ஸீதாதிஷு விதித: கோऽத்ர ஸாக்ஷீ ஸமீக்ஷ்யாஸ்
ஹந்த ஸ்வாதந்த்ர்யவாதீ ஸஹ இதி நரகமஹோ ஸ்யாத் யதா ஸ்வஸ்த்வதா ॥ "

இந்த ச்லோகம் பட்டருடைய வாக்கு. ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய உத்ஸவ மூர்த்திக்குத் திருமஞ்சனம் செய்யும் காலத்தில், பெருமாள் ஈர வாடையுடன் ஓர் துளஸீ மாலையைச் சாத்திக்கொண்டு எழுந்தருளியிருப்பது வழக்கம். அந்த ஸமயத்தில் பட்டர் பெருமாளை ஸேவித்துத் திருமஞ்சன மாடி ஈர வாடையுடன் ஓர் துளஸீ மாலையைச் சாத்திக்கொண்டு பெருமாள் எழுந்தருளியிருக்கும் ரீதியைப் பார்த்துத் 'தேவரீர் ஜீவனைக் குறித்துச் சபதம் செய்கிறாப்போலிருக்கிறது' என்று இந்த ச்லோகத்தில் அருளிச்செய்கிறார். என்ன சபதம் என்றால்:—ஜீவராசிகள் யாவும் பெருமாளுடைய கைங்கரியத்துக்காகவே ஏற்பட்டவை. இதை முன்பே சொல்லியிருக்கிறேன். அவ்விதமான ஜீவராசிகள் எல்லாம் 'நாம் பெருமாளுடைய கைங்கரியத்துக்காக ஏற்பட்டவர்கள்' என்கிற எண்ணம் கொஞ்சங்கூட இராமல் ஸ்வதந்திரமாய் 'நான்' 'என்னுடையது' என்றும், 'நான் ஸ்வதந்த்ரன்' என்றும் ஸ்வரூபஜ்ஞானம் இராமலிருக்கின்றன. 'இவைகளைத் திருத்தி நம் ஸ்வாதீநம் செய்ய எந்த அவதாரங்கள் செய்தாலும் என் நிஜ ஸ்வரூபத்தை அவர்கள் அறிகிறார்களில்லை. ஆகையால் நேரில் ஜீவர்களைப் பார்த்து ஶாஸ்த்ரார்த்தங்களைச் சொல்லி அவர்களைத் நம் வசப்படுத்திக் கொள்ளலாம்' என்கிற எண்ணத்தால் பகவான் ஜீவர்களுக்காக ஒரு ஜீவனைப் பார்த்துச் சொல்கிறார்.

ஸ்வம் ஶேஷம்—'ஹே ஜீவனே! நீ என் வேலைக்காக ஏற்பட்டவன்; என் ஊழியன்; ஆகையால் என்னுடைய சொத்து நீ' என்றார். அதைக் கேட்ட ஜீவன் பகவானைப் பார்த்து,

அஹம் ந—'நான் உமது வேலைக்காரன் அல்லேன்; உமது வேலைக்காக ஏற்பட்டவனு மல்லேன்; நான் ஸ்வதந்திரன்; எனக்காக ஏற்பட்டவனே; ஒருவனுக்குக் கீழ்ப்பட்டவ னல்லன்' என்றான்.

இதைக் கேட்ட பகவான் ஜீவனைக் குறித்து, கதயஸி—'அப்படி நீ சொல்வது எதனாலே? என்ன காரணம் சொல்' என்றார்.

அதற்கு ஜீவன், த்வமபி கத:—'என்னை நீர் என்ன காரணம் சொல் என்று கேட்கிறீர்; நான்தான் உம்மைக் கேட்கிறேன்; நீர் அப்படிச் சொல்வதற்கு என்ன காரணம்? எதனாலே சொல்கிறீர்? சொல்லும்' என்றான்.

அதற்குப் பகவான், உ௨ம்வெ௨உ-ஹுவூஶோணாக—'ஹே ஜீவனே! நான் சொல்வது, நீயும் நானும் ஒப்புக்கொள்ளும்படியான அநாதியான வேதமாகிற மூல ப்ரமாணத்தால் ; வேதம் பெரிய ரிகார்டு ; அந்த ரிகார்டில் 'ஜீவன் பகவானுக்கு ஶேஷபூதன் ; பகவானுடைய வேலைக்காகவே ஏற்பட்டவன் ' என்று கண்டிருக்கிறது ; அதனால் சொல்லுகிறேன் ; அதன் அர்த்தத்தைச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன் கேள். வேதத்துக்குள் முக்யம் ப்ரணவம் என்பது; அது வேதாரம்பத்திலும் முடிவிலும் சொல்லப்படவேண்டியது. அவ்வித ப்ரணவம் மூன்று அக்ஷர முள்ளது; முதல் அக்ஷரமான அகாரம், ஸர்வ ரக்ஷகனை பகவானாகிற என்னைச் சொல்கிறது. மூன்றாவது அக்ஷரம் மகாரம் ஜீவனான உன்னைச் சொல்கிறது. இரண்டாவது அக்ஷரம் உகாரம் உனக்கும் நமக்கும் உள்ள (அதாவது : பரமாத்மாவான எனக்கும் ஜீவாத்மாவான உனக்கும் உள்ள) ஶேஷ ஶேஷி பாவ ஸம்பந்தத்தை அநந்யார்ஹமாகச் சொல்லுகிறது. அந்த ஸம்பந்தம், 'ஜீவாத்மா பரமாத்மாவின் கைங்கரியத்துக்காக ஏற்பட்டவன் ; அந்தக் கைங்கரியம் பகவானுடைய ப்ரயோஜநத்திற்காகவே ஏற்பட்டது ; தனக்காக அல்ல' என்பதைத் தெரிவிப்பதால், நீ என்னுடைய வேலைக்காரன் என்று வேதமாகிற பெரிய ரிகார்டு இருக்கிறது. அதனால் நான் சொல்கிறேன்' என்றார்.

அதற்கு ஜீவன், ஊதஶ்ரா நாஶிஷிஸாஉ ந-ஹவஷிஹவாக—'ரிகார்டு இருக்கட்டும். நான் வெகு காலமாய் (அதாவது: ஆதியில்லாமல், இந்தக் காலம் முதல் என்பதில்லாமல்) கோடிக்கணக்கான காலமாக 'நான், என்னுடையது, நான் செய்கிறேன், இது என்னுடையது ' என்று ஸ்வதந்திரமாக இதானுக்குக் கீழ்ப்படிந்தவனல்லாமல் அநுபவித்து வருகிறேன். ரிகார்டைக் காட்டிலும் அநுபவம் முக்யம். ஒருவன் ஒரு பொருளை, பொருள்காரன் பார்த்திருக்க ஆக்ஷேபம் இராமல் 20–வருஷம் அநுபவித்தானாகில், எந்த ரிகார்டு இருந்தாலும் செல்லாது ; அநுபவம்தான் பலம் ; ரிகார்டு செல்லாது என்று மிதாக்ஷரா வாக்யம்; அப்படி யிருக்க, நீர் பார்த்துக்கொண்டிருக்க யாதொரு உம்முடைய ஆக்ஷேபமும் இராமல், கணக்கிறந்த எத்தனையோ காலமாய் நான் அனுபவித்து வருகிறேன் ; ஆதலின் உமது ரிகார்டு செல்லாது' என்றான்.

அதற்குப் பகவான், ஸொவி ஸாகெ்ரூாஶ ஊவ—'நீ என்ன சொன்னாய் ? ஆக்ஷேபிக்காமல் 20–வருஷம் அநுபவித்தானாகில் ரிகார்டு செல்லாதென்று சொன்னா யல்லவா ? உன்னுடைய அநுபவம் ஆக்ஷேபத்துடன் கூடியது. ஆகையால் அநுபவம் செல்லாது; ரிகார்டுதான் பலம்' என்றார்.

அதற்கு ஜீவன், கூாகெ்ரூாஶஃ கஸெ்ரூ—'ஆக்ஷேபத்தோடு கூடியது எனது அநுபவம் என்று சொன்னீர். எங்கே ஆக்ஷேபம்? யாருடைய ஆக்ஷேபம் ?' (இதார் ஆக்ஷேபித்தால் செல்லாதென்று மனதில் எண்ணிக்கொண்டு) 'எவ்விடத்தில் யார் ஆக்ஷேபித்திருக்கிறார்கள் சொல்லும்' என்றான்.

அதற்குப் பகவான், ஶீதாஶிஷ-உஉ—'பகவத் கீதை விஷ்ணு புராணம் முதலிய இடங்களில் நான் ஆக்ஷேபித்திருக்கிறேன். கீதையில் 'உஶெவாம்ஶொ ஜீவஃ' என்றும் ஆக்ஷேபித்திருக்கிறேன் ' என்றார்.

அதற்கு ஜீவன், 'இதரர் அறியாமல் ஓரிடத்தில் எங்கேயோ சொல்லி விட்டால் அது என்ன பிரயோஜனம்? எல்லாருக்கும் தெரியும்படியாய் இருக்க வேணும் ஆக்ஷேபம்' என்றான்.

அதற்குப் பகவான், விதித:—'என் ஆக்ஷேபம் எல்லாருக்கும் தெரியும்; எல்லாரும் அறிவார்கள்' என்றார்.

அதற்கு ஜீவன், கோத்ரஸாக்ஷீ—'எல்லாரும் அறிவார்கள் என்றீர். யார் அறிவார்கள்? அவர்களில் ஒருவனைச் சொல்லும்; அவனை ஸாக்ஷியாக எடுத்துக் கொள்வோம். அந்த ஸாக்ஷி, 'பகவான் இந்த இடத்தில் இது மாதிரி ஆக்ஷேபித்திருக்கிறார்' என்று சொல்லவேண்டும். அப்படிப்பட்ட ஸாக்ஷியைச் சொல்லும்' என்றான்.

அதற்குப் பகவான், ஸுதீ: ஸாக்ஷீ—'எவன் கீதை முதலியவற்றின் அர்த்தத்தை அறிகிறானோ அவனுக்குத்தான் தெரியும். அப்படி ஜ்ஞான முள்ளவன் ஶாஸ்த்ரம் அறிந்த பண்டிதன். அவன்தான் நான் ஆக்ஷேபித்திருக்கிறேனென்பதற்கு ஸாக்ஷி' என்றார்.

அதற்கு ஜீவன், ஹந்த ஸ்வபக்ஷவாதீ ஸ:—'இது ரொம்ப ஆச்சர்யம். உமக்கு வேண்டியவன் எவனோ அவனை ஸாக்ஷியாகக் கோரினீர். அயலாரைக் கோரினால் நம் இஷ்டம்போல் சொல்லமாட்டானென்று வேண்டியவனைப் பார்த்துப் பண்டிதனைக் கோருகிறீர். 'ப்ரியோ ஹி ஜ்ஞானினோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:' 'ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்' என்று நீரே சொல்லியிருக்கிறீர். ஆகையால் அந்தப் பண்டிதனுடைய ஸாக்ஷ்யம் ஒப்பத்தகுந்ததன்று' என்றான்.

பகவான் யோசித்தார். ஸாக்ஷியை ஒப்பாமலிருக்கும் வ்யவஹாரங்களில் ஸத்யம் (அதாவது: சபதம்) செய்து கேஸை ஜயிக்கிற வழக்கம் உண்டு. அதுபோல் நாகஶயநஸ்ய ஶபதஸ்ஸுவ்ருத்தம்—இந்த ஜீவாத்மாவுக்கும் தனக்கும் உண்டான கேஸில் ஸாக்ஷிகளை ஒப்பாவிட்டாலும், ஶபதம் செய்தேனும் ஜீவாத்மாக்களைத் தமதாகச் செய்யவேணும் என்று சபதம் செய்ய ஆரம்பித்தார் போலும். 'ஶபதஸ்ஸு:' என்றால் சபதம் செய்கிறவனுக்குப் பெயர்.

ஹே ரங்கநாதா! தேவரீர் திருமஞ்சன காலத்தில் ஈர வாடையுடன் துளஸீ மாலை யணிந்திருப்பதைப் பார்த்தால், உமக்கும் ஜீவாத்மாவுக்கும் கலஹம் நடந்து, அதில் ஶபதம் செய்தாவது ஜீவனைத் தமதாகச் செய்யவேண்டுமென்கிற எண்ணத்துடன சபதம் செய்கிறாப்போல் தோன்றுகிறதென்று, பட்டர், திருமஞ்சனத்தில் பெருமாளை ஸேவித்துச் சொன்ன ச்லோகம் இது.

ஸுசீலா—ஸகி! ஸுகுணா! மிகவும் நன்றா யிருக்கிறது. உனக்கு ரொம்பவும் சிரமம் கொடுத்தேன். மன்னிக்க வேணும்.

ஸுகுணா—தோழி! என்ன ச்ரமம்? விஷயங்களைக் கேட்போர்கள் துர்லபம்; நீ கேட்டுத் தெரிந்துகொண்டது ஸந்தோஷம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:

# ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்திகள்

[ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி அய்யங்கார், அட்வகேட், சென்னை]

ஒரு நூற்றுண்டுக்கு மேல் இந்நிலவுலகில் வாழ்ந்து, தமது ஜீவ்ய காலத்தில் நூற்றுக்கு மேற்பட்ட அரும் பெருங் க்ரந்தங்களை நிர்மாணம் செய்து தந்து போன ஆசார்ய வள்ளலின் வாழ்க்கை வரலாறும் அருளிச்செயல் ப்ரபாவமும் பின்புள்ளார் பலரால் எடுத்துப் பேசப்பட்டிருந்தும், முக்யமான அம்ஶங்களில் காலம் இடம் முதலிய முக்ய விவரங்கள் இதுவரை தீர்மானமாக நிஷ்கர்ஷிக்கப்படாமலே நிற்கின்றன. பொதுவாக, நம் முன்னேர்களுக்குச் சரித்ர உணர்ச்சி போதுமான அளவில் இல்லாமலிருந்ததே இதற்கு முக்ய காரணம். இப்படிப்பட்ட மஹாபுருஷன் வேறு நாட்டில் அவதரித்திருந்திருப்பின், அவர் பிறந்து வளர்ந்து வாழ்ந்த இடங்களெல்லாம் நன்கு பாதுகாக்கப்பட்டு வந்திருக்கும். மேல்நாட்டில் ‘ஷேக்ஸ்பியர்’ என்கிற ஒரு கவி பிறந்த வீடு அப்படியே இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வந்து, மஹாராஜா முதல் சுற்று ப்ரயாணம் செய்வதில் ஊக்கமுடைய ஸாமாந்யன் வரையில் அனைவராலும் ஆதரவோடு போய்ப் பார்க்கப்பட்டுப் போற்றப்பட்டு வருகிறது. அயிந்தை மாநகரில் ஆசார்ய ச்ரேஷ்டர் திருமாளிகையும், அவர் திருக்கைகளால் கட்டப்பட்ட ஒரு கிணறும், இவ்விரண்டும் மட்டும் பல மாறுபாடுகள் அடையப்பெற்றுயினும், இன்றைக்கும் தேசிக பக்தர்களால் கண்டு தர்ஶிக்கப்பட்டுவருகின்றன. ஸ்வாமி அருளிச்செய்த ஸ்ரீஸூக்திகளின் விஷயமாக ஸரியான குறிப்புகள் காணப்படவில்லை. எந்த ஸ்தோத்ரம் அல்லது எந்தக் காவ்யம் எந்த ப்ரதேசத்திலே எந்தக் காலத்தில் அருளிச்செய்யப்பட்டதென்று திடமாக ஒருவரும் கூறமுடியாத நிலையில் அம்வம்ஶங்கள் ஆராய்ச்சிக்கு விஷய மாகாமலே போய்விட்டன. நூற்றுக் கணக்கான க்ரந்தங்களுள் ஏதோ சிலவற்றைக்குறித்துச் சில அபிப்ராயங்கள் காணப்படுகின்றன. அவற்றிலும் நிர்விவாதமானவை வெகு சிலவே.

ஸமீப காலத்தில் விளங்கிய அஸ்மத் தேசிக ஸம்ப்ரதாயநிஷ்டர்கள் அனைவரையும் நேரில் கண்டு அநுபவித்தது மன்றித் தாமும் சீரிய தேசிக பக்தியுடனும், தேசிக ஸ்ரீஸூக்திகளில் ஆழ்ந்த பரிசயத்துடனும் ரஸமான அநுபவத்துடனும் விளங்கும் பெரியாரான நம் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி, தேசிக ஸ்ரீஸூக்திகளின் கால இட நிர்ணயங்களைப்பற்றி வெகுவாக ஆலோசித்துவருவது பலருக்குத் தெரியாமலிருக்கலாம். அவருடன் நெருங்கிப் பழகும் பாக்யம் பெற்ற அடியோங்களுக்கு அவ்வப்போது அந்த ஸ்வாமி எடுத்துச் சொல்லும் ரஸோக்திகளும் குறிப்பாகக் காட்டும் ஆராய்ச்சி மார்க்கங்களும் பேரானந்தத்தைக் கொடுத்து வருகின்றன. பிறருக்குத் தோன்றுத ரஸமான அர்த்தங்கள் அந்த ஸ்வாமிக்குத் தோன்றுவது, அவருடைய சொற்

பொழிவுகளைக் கேட்போர் அனைவர்க்கும் தெரிந்ததொரு விஷயம். ப்ரக்ருதத்தில் அவர் தேசிக ஸ்ரீ ஸூக்திகளின் விஷயமாக ஒரு நவீந ஆராய்ச்சி முறையைக் காட்டிக்கொடுத்திருப்பதைமட்டும் இங்கே குறிக்கிறேன்.

ஸ்வாமி தேசிகனுடைய முப்பதிற்கு மேற்பட்ட ஸ்தோத்ரங்களை அநுஸந்தித்துவரும் அன்பர்கள், அவற்றிலே ஒரு அம்ஶம் மறைந்திருப்பதைக் காணலாம். பல ஸ்தோத்ரங்களில் முதல் ச்லோகத்தின் முதல் பாதத்திலேயே நம் நாட்டில் நடையாடிவரும் அறுபது வருஷங்களுள் ஒரு வருஷத்தின் பெயரைக் காணலாம். ஸ்ரீஸ்துதியில் விபவ வருஷமும், கோதாஸ்துதியில் நந்தந வருஷமும், ஹயக்ரீவ ஸ்தோத்ரம் கருட பஞ்சாஶத் இவ்விரண்டிலும் ஆநந்த வருஷமும், தசாவதார ஸ்தோத்ரத்தில் சுபக்ருத் ஸம்வத்ஸரமும், தேஹளீஶ ஸ்துதியில் விக்ரம ஸம்வத்ஸரமும், ஸுதர்சநாஷ்டகத்தில் தாரண ஸம்வத்ஸரமும், ரகுவீர கத்யத்தில் ஜய ஸம்வத்ஸரமும் ஷோடஶாயுத ஸ்தோத்ரத்தில் ஈச்வர வருஷமும் பேசப்பட்டிருப்பதைக் காண்கிறோம். 'இவை யனைத்தும் அகஸ்மாத்தாக (அதாவது: யாத்ருச்சிகமாக) உபயோகிக்கப்பட்ட சொற்களா? அல்லது கவி வேண்டுமென்று உபயோகித்த சொற்களா?' என்பதைக் குறித்து ஆலோசிக்கவேண்டும். மஹா கவியாகிய தேசிகனுடைய ஸ்ரீ ஸூக்திகளாகையால் இத்தனை ஸூசனைகளையும் அகஸ்மாத் ப்ரயோகங்களென்று ஒதுக்கிவிடுவது உசிதமன்று. பகவத் ஸங்கல்பமன்றி இவ்வுலகில் ஒரு நிகழ்ச்சியும் நடைபெறுவதில்லை. சிலவற்றை நாம் 'அகஸ்மாத்' என்று வ்யவஹரிப்பது, அதனுடைய 'கஸ்மாத்' (காரணம்) நமக்கு விளங்காதபடியாலே. ஸர்வஜ்ஞனன எம்பெருமான் திருவுள்ளம் அறிந்தோமாகில் அனைத்தும் 'தஸ்மாத்' என்பது நமக்குப் புலப்படும். ஆகவே, எம்பெருமானது வல்லமையையும் ஒருபடி அதிஶயித்து நிற்கும் இப்பரமாசார்யரது ஶப்த ப்ரயோகங்களுக்கு என்ன உண்மை லக்ஷ்யம் என்று பராமர்சித்துப் பார்ப்பதே நாம் செய்யவேண்டிய கடமை. அக்கவிகேஸரியின் கவிதா பாணியைக் கூர்ந்து கவனிப்பவர்களுக்குப் பாஷா வல்லமையின் முதிர்ச்சியால் அவர் ப்ரயோகிக்கும் ஒவ்வொரு சொல்லும் ஒரு முக்ய ஸூசனைக்காகவே ப்ரயோகிக்கப்பட்டுள்ளதென்பது விளங்காமற் போகாது. மேற்குறித்தபடி பல ஸ்தோத்ரங்களில் முதன் முதலிலேயே காணப்படும் ஸம்வத்ஸர நாமாக்கள் இசம்பரமாக ஸ்வாமியால் உபயோகிக்கப்பட்டனவா அல்லவா என்று யோசித்தல் வேண்டும். ஆமெனில், என்ன உத்தேசத்தைக் கொண்டு அப்படி ப்ரயோகித்திருக்கிறாரென்பது அடுத்த ஆராய்ச்சி. எல்லா ஸ்தோத்ரங்களிலும் இப்படிக் காணக் கிடைக்கவில்லையே என்ற ஆக்ஷேபம் எழலாம். அதற்குப் பதிலாக அப்படி நேருக்கு நேராகக் காணாத ஸ்தோத்ரங்களில் வருஷத்தின் பெயர் மறைந்து கிடக்கிறதா, அல்லது தலைப்பில் இல்லாமல் வேறு பாகத்தில் காணக் கிடக்கிறதா என்று ஆராய்ந்து பார்க்கவேண்டும். அப்படியில்லாவிடிலும்கூட இம்மாதிரியான அபிப்ராயம் ஸ்வாமிக்கு ஏதோ ஒரு காலத்திற்கு முந்தியோ பிந்தியோ தோன்றியிருக்கலாம். இந்த முறையில் ஆலோசித்து முடிவிற்கு வரவேண்டியது ஆராய்ச்சித் திறமையும், ஸ்வாமி தேசிகன் திருவுள்ளத்தின் சுவடறிவதில் நைபுண்யமும் பெற்ற பெரியோர்கள் மேற்கொள்ளவேண்டுவ

தோர் பணி. தேசிகன் திருவடிகளிலே பூரண பக்தியோடு இம்மாதிரி ஆராய்ச்சிகளில் இழிந்து உலக மக்களுக்கு அருமையான அர்த்த விசேஷங்களைக் காட்டிக்கொடுக்கவேண்டிய கடமை அசேஷ தேசிக பக்தர்களுக்கும் உளதென்பதை அவர்கள் திருவடிகளில் தலை தாழ்த்தி அடியேன் விண்ணப்பித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேற்குறித்த ரீதியில் செய்யப்பட்ட ஆராய்ச்சி மூலமாய் ஸ்ரீமான் வீ. வீ. ஸ்வாமி அடியோங்களுக்குக் காட்டிக்கொடுத்த வெகு அழகான ஒரு நிர்த்தாரணத்தை மட்டும் இங்கே குறிக்கிறேன்.

ஸ்ரீஸ்துதி முதல் ச்லோகத்தில் காணப்படும் விபவ என்கிற சொல்லைக் கொண்டு அந்த ஸ்தோத்ரம் விபவ ஸம்வத்ஸரத்தில் அவதரித்ததென்று கொண்டு சற்று யோசிப்போமாகில், அதிலிருந்து ஏற்படும் சரித்ராம்சங்கள் மிகவும் அழகாக இருக்கின்றன. ஸ்வாமி அவதரித்தது விபவ ஸம்வத்ஸரமாகையால், இந்த ஸ்தோத்ரம் ஸ்வாமியினுடைய ஷஷ்டி பூர்த்தி ஸம்வத்ஸரத்தில் அவதரித்திருக்கவேண்டும். அறுபது வயதுகள் பூர்த்தியாவதென்பது நம் நாட்டிலே தொன்றுதொட்டுப் பாராட்டப்பட்டு வருவதொரு நிகழ்ச்சி. இக்காலத்தோர்களைப்போல் படாடோபமும் ஆடம்பரமும் இல்லாவிடினும், தமக்கு அறுபதாண்டு பூர்த்தியாயது என்ற எண்ணத்தால் ஸ்வாமி திருவுள்ளம் எந்த நிலையை அடைந்திருக்குமென்று நாம் ஒருவாறு ஊஹிக்கலாம். ஸ்வாமியினுடைய அவதாரத்திற்கு முக்ய காரணம் திருவேங்கடமுடையான் என்பது நிர்விவாதம். ஸ்வாமி தம்மாலேயே,

‘உதெகஷூஸதெ ஷ-யஜஜெநெ ரு-வவதிஹஹூ
வணா ஹரெஸூஜநிஷ யதா கூநெதி’

என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்திலும், ஸ்வாமி திருக்குமாரராலே ‘வெஷ டெமாவதாரொயழ’ என்று தொடங்கும் ச்லோகத்திலும், ‘அன்றிவ்வுலகினை யாக்கி’ என்கிற பாசுரத்திலும் காட்டப்பட்ட அவதார ரஹஸ்யம் இது. தமது பிறப்பிற்குக் காரணமாயிருந்த அலர்மேல்மங்கை மணாளனைத் தமது ஜந்ம ஸம்வத்ஸரமான விபவ வருஷத்தில் அடிபணிந்துநின்றாரென்றால் அதில் எத்தனை ஔசித்யம் இருக்கிறது? ஷஷ்டியப்த பூர்த்தி விழாவைக் கொண்டாடும் ஒருவனுக்கு மாதா பிதாக்கள் உயிருடன் இருந்தால் அவர்களை வணங்கிப் புகழ்வதிலும் மேலாக அவ்விழாவை எப்படிக் கொண்டாடுவது? தமக்கும் உலக மனைத்திற்கும் நிருபாதிக மாதாவாகவும், தமது விஷயத்தில் ஒருபடி விசேஷித்து அநுக்ரஹித்தவராயும் விளங்கும் அலர்மேல்மங்கைத் தாயாரை அடிபணிந்து மங்களாசாஸநம் செய்து, அப்பொழுது ஏற்பட்ட அநுபவத்தின் பரீவாஹமாக ஸ்ரீ ஸ்துதியை அருளிச்செய்திருக்கக்கூடுமல்லவா? அதை ஸூசிப்பிக்கவேண்டியே ‘ஊநாதீத ஹுஸி தவிஹவா’ என்று ஸ்தோத்ரம் ஆரம்பிக்கிறது. ‘ஊதாஷெவிகவஉஷிஹமவாநு வாவஷெவ: விதாஷெ’ என்று பேசித் தாய் தந்தையர் இருவரையும் கொண்டாடும் அம்சமும் அதில் காணப்படுகிறது.

அப்படியாயின் ஸ்ரீஸ்துதி திருச்சானூர் என்று இப்பொழுது பெயர் வழங்கி நிற்கும் அலர்மேல்மங்காபுரத்தில் கோயில்கொண் டெழுந்தருளியிருக் கும் அலர்மேல்மங்கைத் தாயார் விஷயம் என்று முடிவு கட்டவேண்டியிருக் கிறது. 'இது யுக்தமா? இதற்கு ஸ்தோத்ரத்தில் ஏதேனும் குறிப்புக்கள் இருக் கின்றனவா?' என்கிற விமர்சங்கள் அடுத்தபடியாக ஏற்படுவன. ஸ்தோத் ரத்தை உற்று நோக்குவோம்.

இந்த ஸ்தோத்ரத்திற்கு ஸ்வாமி வைத்திருக்கும் பெயர் 'ஸரஸிஜ நில யாயா: ஸ்தோத்ரம்' என்பது. அது கடைசி ச்லோகத்திலிருந்து தெரிகிறது. 'அலர்மேல்மங்கை ஸ்தோத்ரம்' என்று அதனாலேயே விளங்குகிறது. யாரு டைய தேவி என்பதை முதல் ச்லோகத்திலும் ஸ்தோத்ரத்தை தலைக்கட்டும் நிகமன ச்லோகமாகிய 'கல்யாணாநாமவிகலநிதி:' என்கிற ச்லோகத்திலும் மதுவிஜயியினுடைய தேவி என்று பேசுகிறார். 'மதுவிஜயீ' என்கிற சப் தத்தை யிட்டுத் திருவேங்கடமுடையானை நம் ஆசார்யன் நிர்த்தேசிப்பதை ஹம்ஸ ஸந்தேசத்தில் காண்கிறோம். அங்கே பல திவ்ய தேசத்து எம்பெரு மான்களைப் பாடிக்கொண்டே போகும்போது திருவேங்கடமலையில் வாழும் பெருமானுக்குமட்டும் 'மதுவிஜயீ' சப்தம் அஸாதாரணமாக ப்ரயோ கிக்கப்பட்டிருக்கிறது.

('ஶக்த்யா காமம் மது விஜயிநஸ்ஸம்ஸ்ம ரந்த்யஸ்ஸமஸ்தா:')

என்பது அங்கே உள்ள பங்க்தி. 'மதுமதந தயே' என்பது போன்ற தயா சதக ப்ரயோகங்களும் இருக்கின்றன. இந்த மதுவிஜயீ சப்தத்தை ஸ்ரீஸ்துதி யில் இரண்டு முறை ப்ரயோகித்திருப்பதால், அது ஒரு உத்தேசத்தைக் கொண்டுதான் என்று கொள்ளலாம். அந்தத் திருநாமம் திருப்பதி ஸ்ரீநிவாஸ னுக்கு உரிய திருநாமமாக வேறிடத்தில் கையாண்டிருப்பதையும் சேர்த்துப் பார்க்கும்போது, ஸ்ரீஸ்துதி அலர்மேல்மங்கைத் தாயார் விஷயம் என்று முடிவு கட்டுவது யுக்தமே யன்றோ? 'ஸீமாதீத ப்ரதித விபவா'—[அளவு கடந்து ப்ரஸித்தமான வைபவத்தை யுடையவள்] என்கிற அடைமொழி ஒரு யோசனை யில் திருச்சானூர் தாயாருக்கே தகும் என்றுகூடச் சொல்லலாம்போல் இருக் கிறது. எல்லாக் கோயில் தாயார்களும் படிதாண்டாப் பத்நிகளாய்க் கோபுர வாயில் வரம்புக் குட்பட்ட விபவத்தை உடையவர்களாயிருக்க, இத்தாயார் ஒருவரே அந்த அளவுகளைக் கடந்து வெளியேயும் விஸ்தரிக்கும் விபவத்தை யுடையவர் என்பது ப்ரஸித்திபெற்றதொரு விஷயம். இதை மறை பொருளாகக் காட்டியருளுகிறார் போலும்! ஸம்ஸ்க்ருத பாஷா பரிசயமும் கவிதா ரஸிக்ய மும் பெற்ற மஹான்கள் இவ்விஷயத்தில் இன்னும் எவ்வளவோ அடையாளங்க ளையும் குறிப்புக்களையும் காண்பார்கள் என்பது அடியேனது துணிபு.

ஜகந் மாதாவை அடிபணிந்து அவர் விஷயமாக ஸ்ரீஸ்துதி பாடியவர் அதே காலத்தில் திருவேங்கடத்தப்பன் விஷயமாக அவதரித்த தயாசதகத்தை யும் அருளிச்செய்தாராதல் வேண்டும். இதனைத் தனியே மற்றொரு விஷயமாக ப்ரஸ்தாவிப்போம்.

189273

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஸ்ரீ அழகிய சிங்கருடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம்

[ஸ்ரீ வைஷ்ணவ தாஸன்]

ஸ்ரீ ஸந்நிதி சிஷ்யர்களாகிய நாமெல்லாம் ப்ரதி வர்ஷமும் ஸ்ரீ ஸந்நிதிக்குச் சென்று ஸேவித்தும் அநுபவித்தும் ஸந்தோஷிக்கும் மஹோத்ஸவங்களில் ஸ்ரீ அழகிய சிங்கருடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்பந்தான் மிகவும் சிறப்புடன் விளங்குவது. ப்ரதி வர்ஷமும் ஆடி மாஸம் பௌர்ணமி யன்று நடக்கும் இந்த மஹோத்ஸவத்துக்குத் தேசத்தில் எல்லாப் பக்கத்திலும் வஸிக்கும் சிஷ்யர்களும் திரண்டு வந்து ஆசார்யனை ஸேவித்து க்ருதார்த்த ராவார்கள்.

சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் என்பது என்ன? இது க்ருஹஸ்தர்களுக்கு இல்லாமல் ஸந்யாஸிகளாக இருப்பவர்களுக்கு மாத்ரம் விதிக்கப்பட்டுள்ள ஒரு தர்மம். அன்று பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யராக எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ அழகியசிங்கர், நான்கு பக்ஷங்களுக்கு ஒரே ஸ்தலத்தில் எழுந்தருளி யிருக்க ஸங்கல்பித்துக்கொண்டு, அந்த நான்கு பக்ஷங்களிலும் தம்முடைய தினப்படி அநுஷ்டானங்களுக்கு வேண்டிய ம்ருத் (மண்) முதலிய ஸாமக்ரிகளை ஸங்க்ரஹம் செய்துகொள்வார். ம்ருத் ஸங்க்ரஹணம்தான் அன்று நடக்கும் மிகவும் முக்யமான கார்யம். அன்று பௌர்ணமி தினமானபடியால், ஒவ்வொரு பௌர்ணமியும் நடப்பதுபோல் அன்றும் ஸ்ரீ அழகியசிங்கர் திருமுடி விளக்கம் கண்டருளியாகும். ஒரே ஸ்தலத்தில் எழுந்தருளியிருக்க ஸங்கல்பித்துக்கொள்ளும் ஆசார்யனை ஶிஷ்யர்களெல்லாம் ஸந்தோஷத்தோடு ஸேவித்து, அவரை அதே இடத்தில் ஸுகமாக எழுந்தருளியிருக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்துக் கொண்டு, அவருக்குத் தங்கள் சக்திக்கு ஏற்றவாறு சுச்ரூஷை செய்ய அநுமதிக்கும்படி விண்ணப்பம் செய்துகொள்வார்கள். அவர்கள் ப்ரார்த்தனையை ஆசார்யன் அங்கீகரித்தருளியாகும். மற்ற நாள்கள் இல்லாமல் சாதுர்மாஸ்ய ஸங்கல்ப தினத்தன்று மாத்ரம் நடக்கும் நிகழ்ச்சிகள் இவைதான்.

ஸ்ரீ அழகியசிங்கர் ஜகதாசார்யனாக விளங்குவதாலும், இது அவர் கண்டருளும் மிகவும் விசேஷமான மஹோத்ஸவ மானபடியாலும், அன்று இந்த ஸ்ரீ மடத்தின் சிஷ்யர்கள் ஏராளமாக வந்து மஹோத்ஸவத்தை ஸேவித்து க்ருதார்த்தர்களாவார்கள். திவ்ய தேசங்களிலிருந்து எம்பெருமான்களுடைய மரியாதைகளைக் கொண்டுவந்து ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸமர்ப்பிப்பார்கள். இவ்வாறு சிஷ்ய ஸம்ருத்தி ஒன்றுகூடி ஸ்ரீ அழகியசிங்கரை ஸேவித்துப் போற்றும் இந்த சுப தினத்தில், ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் விசேஷமான திருவாராதனங் கண்டருள்வார் என்று சொல்லவேண்டுமோ? கடைசியாக இவ்வுத்ஸவத்துக்கு வந்து ஸேவிக்கும் சிஷ்யர்களை ஸ்ரீ அழகியசிங்கர் பரிபூர்ணமாக அநுக்ரஹித்தருளியாகும்.

வழக்கம்போல் இந்த வர்ஷமும் ஸ்ரீ அழகியசிங்கருடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் திருவெவ்வுளூரில் மிகவும் சிறப்புடன் நடந்தது. திருவெவ்வுளூரில் தற்காலம் உள்ள தீர்த்த வஸதிக் குறைவினல் அங்கு அனுஷ்டானங்களுக்கு மிகவும் சிரமமாக இருக்குமென்றும், ஆகையால் இப்போது அங்குப் போவது உசித மில்லை யென்றும் சில நண்பர்கள் அடியேனுடைய உத்ஸாஹத்தைக் குறைக்கும்வண்ணம் கூறியதையுங் கேளாமல் மஹோத்ஸவத்துக்கு முதல் நாளே அடியேன் திருவெவ்வுளூருக்குச் சென்றேன். இவ்வாறு சென்றது மிகவும் நல்லதாகிவிட்டது. ஏனெனில்: அந்தத் திவ்யதேசத்தின் ஸ்தல புராணத்தில் அத்யாயம் அத்யாயமாகப் படிக்கப்பட்ட பெருமை யுள்ளதும், தன்னுடைய ஸ்வச்சமும் சீதளமுமான தீர்த்தத்தால் எல்லா ஜனங்களுடைய ஹ்ருதய தாபத்தையும் போக்கவல்ல பெருமையைப் பெற்றதுமான ஹ்ருத்தாபநாசினீ புஷ்கரிணீ தீர்த்த மெல்லாம் வறண்டுபோய், தநிகனும் மநஸ்வியுமாகிய ஒரு ப்ரபு தனது கையிலுள்ள பொருளெல்லாம் போனபின்பு நிற்பதுபோன்ற நிலைமையில் காட்சி யளித்தது. அந்தப் புஷ்கரிணியில் அநுஷ்டானம் செய்வதற் கில்லாமல் போய்விடவே, அடியேன் முதல் நாளே திருவெவ்வுளூருக்குச் சென்றுவிட்டபடியால், மறுநாள் காலையில் தீர்த்தம் ஆடுவதற்கு வேண்டிய ஸௌகர்யங்களைச் சில நண்பர்களின் உதவியால் செய்துகொள்ள முடிந்தது.

சனிக்கிழமை யன்று தான் ஸங்கல்ப மஹோத்ஸவம். அன்று காலையிலிருந்து உத்ஸவ கோலாஹலங்கள் நடைபெற்றன. அங்கு நடந்த விசேஷங்களையெல்லாம் வர்ணிக்க அடியேனல் முடியாது. ஆயினும் அங்கு அடியேன் அனுபவித்த விஷயங்களில் சிலவற்றை இங்கு விண்ணப்பித்துக்கொள்வது உபபந்நமாகவே இருக்குமென்று நினைக்கிறேன்.

அன்று விடியற்காலையிலேயே அடியேன் ஸ்நாந ஸந்திகளை ஒருவிதமாக முடித்துக்கொண்டு ஸ்ரீ ஸந்நிதிக்குச் சென்றேன். அங்கே மற்ற ஸ்வாமிகள் அடியேனுக்கு முன்னமேயே தங்கள் அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு த்வாதச ஊர்த்வ புண்ட்ரங்கள் ஜ்வலிக்க, நித்ய ஸூரிகளைப்போல் விளங்கிக் கொண்டு அங்கு ஸேவை யளித்தார்கள். விச்வரூபப் பசுவும் அதன் கன்றுக் குட்டியும், மஞ்சள் குங்குமம் முதலிய மங்கள வஸ்துக்களால் அலங்கரிக்கப் பட்டு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஸந்நிதிக் கெதிரில் நின்றன. ஒரு குதிரையும் அங்கே எதிரே நின்றது. ஸ்ரீ ஸந்நிதி யானை, வாசலில் வீதிக்கே அலங்காரமாக மிகவும் கம்பீரமாக நின்றது. 'பைங்கணானைக் கொம்புகொண்டு பத்திமையால் அடிக்கீழ், செங்கணாளி யிட்டிறைஞ்சும் சிங்கவேள் குன்றத்து' அப்பனுடைய ப்ரதம கடாக்ஷத்துக்கு இவ்வாறு யானையும் குதிரையுங்கூட ஆவலுடன் நிற்பதைக் கண்டு மகிழ்ந்தேன்.

இவ்வாறு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ப்ரதம கடாக்ஷத்துக்காக அடியார்கள் குழாங்க ளெல்லாம் காத்திருக்க, அவர்களுக்குச் சீக்ரமாக எம்பெருமானுடைய ஸேவையைப் பண்ணி வைப்பதற்காக ஸ்ரீ அழகிய சிங்கர் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ அழகிய சிங்கர் எழுந்தருளும்போது

மேள வாத்யம் திருச்சின்னம் முதலியவை ஒலித்தன. சிஷ்யர்களெல்லாம், 'ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய' என்பது முதலான ஸ்ரீ அழகிய சிங்கருடைய பிருதுகளையெல்லாம் கூறிக்கொண்டு பின்னால் வந்தார்கள். இவ்வாறு வந்த ஸ்ரீ அழகிய சிங்கர் ஸந்நிதிக்குள் ப்ரவேசித்ததும் வெளியில் திரை சேர்க்கப்பட்டது. பின்பு ஸ்ரீ ஸந்நிதி ஆராதகர்களும் மற்றவர்களும் திரைக்கு வெளியிலிருந்து ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய ஸுப்ரபாத ஸ்தோத்ரத்தை உச்ச ஸ்வரத்தில் அநுஸந்தித்தார்கள். பின்பு ஒரு ஸ்வாமி பூபாள ராகத்தில் பகவானைத் திருப்பள்ளி யுணர்த்தும் பாசுரங்களையும் ச்லோகங்களையும் அநுஸந்தித்தார். இத்தகைய அநுஸந்தாநங்களையெல்லாம் திருச்செவி சாத்திக்கொண்டு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் துயிலுணர்ந்தான். திரை அகற்றப்பட, அடியோங்களெல்லாம் இந்த எம்பெருமானுடைய ப்ரதம கடாக்ஷத்துக்கு இலக்கானோம். எல்லாரும் எம்பெருமானைக் கண்குளிர ஸேவித்தோம். விச்வரூப ப்ரஸாதமான க்ஷீரம் விநியோகம் ஆனவுடன் அபிகமன ஆராதனத்துக்காகத் திரை சேர்க்கப்பட்டது.

இந்த விச்வரூப ஸேவை, அதன் பிறகு நடந்த அபிகமன ஆராதனம், மத்யாஹ்நம் நடந்த இஜ்யைத் திருவாராதனம், முதலிய எல்லாம் தினமும் நடக்கும் ஆராதனங்கள்தான். ஆயினும் ஆயிரக் கணக்கான சிஷ்யர்கள் திரண்டு உத்ஸாஹத்தோடு அநுஸந்தானங்களையெல்லாம் கம்பீரமாக அநுஸந்தித்துக் கொண்டு நடத்திய அன்றைத் திருவாராதனங்கள் மிகவும் விலக்ஷணமாகத் தான் இருந்தன.

அபிகமனத்துக்காகத் திரை சேர்க்கப்பட்டதும், ஸ்வாமிகள் கோஷ்டியாக நின்றுகொண்டு திருப்பல்லாண்டு திருப்பள்ளியெழுச்சி திருப்பாவை முதலிய ப்ரபந்தங்களையும், ஸ்ரீமத் வேதாந்ததேசிகனுடைய ஸ்தோத்ரங்களில் மிகவும் முக்யமான ஸ்ரீ தசாவதார ஸ்தோத்ரம் முதலியவற்றையும், ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரத்தையும் அநுஸந்தித்தார்கள். பிறகு, உபநிஷத் புருஷ ஸூக்தம் முதலியவைகளும் ஓதப்பட்டன. ஸ்ரீ ஸந்நிதி கைங்கர்யபரர்களும், அங்குக் காலக்ஷேபம் பண்ணும் வித்வான்களும், இந்த அநுஸந்தானங்களில் பக்தி ச்ரத்தையோடும் முழு மனத்தோடும் அந்வயித்து நடத்தியது குறிப்பிடத் தகுந்தது.

அபிகமநாராதனம் பூர்த்தியாகி கற்பூர ஆலத்தி காட்டி சாத்துமறை அநுஸந்தானம் ஆகும்போது, மண்டபத்தில் ஸுமார் ஆயிரம் ஜனங்களுக்குக் குறையாமல் கூடியிருந்தார்கள். எல்லாரும் பரமைகாந்திகள்; எல்லாரும் பண்டிதர்கள்; எல்லாரும் ஸ்ரீ அழகியசிங்கருடைய திருவடிகளில் மிகவும் ப்ரதிபத்தியுள்ள பெரியோர்கள்; அந்தக் கோஷ்டியில் தேவனார்விளாகம் ஸ்ரீ. உப. லக்ஷ்மீந்ருஸிம்ஹாசாரிய ஸ்வாமி, ஸ்ரீ. உப. தோட்டாலம் வேணு கோபாலாசார்ய ஸ்வாமி முதலிய பெரிய வித்வான்களெல்லாம் கலந்திருந்தார்கள். வேதங்களைப் பூர்ணமாக அத்யயனம் பண்ணிய கநபாடிகள் அநேகர் இருந்தார்கள். லௌகிகர்களான ப்ரமுகர்கள் அநேகர் இருந்தார்கள். இத்தகைய பெரிய மஹான்களோடு கூட எம்பெருமானை ஸேவிக்கக் கொடுத்து

வைத்த அடியேனுடைய ஸுக்ருத பரிபாகத்தை நினைத்து அடியேன் மிகுந்த ஸந்தோஷ மடைந்தேன்.

சாத்து மறையில் வேத சாத்துமறையை அநுஸந்திக்கும்போது அந்தக் கோஷம் மண்டபத்தில் ப்ரதிபலித்தது. ச்ரோத்ரானந்தகரமாக நடந்த இந்த அநுஸந்தானத்திலும், அன்று நடந்த மற்ற வேத பாராயணம் பஞ்சாதி முதலியவற்றின் அநுஸந்தானத்திலும் அந்வயித்தவர்களில் பலர், மதுராந்தகம் வேத சாஸ்த்ர பாடசாலையில் ஸ்ரீ அழகியசிங்கருடைய ஆதரவினால் அத்யயனம் பண்ணியவர்கள் என்பதை அறிந்து அடியேன் மிகவும் ஸந்தோஷித்தேன். இது ஸ்ரீ அழகியசிங்கருடைய க்ருஷி ஸார்த்தமாகி வருகிறது என்பதைக் காட்டும் நிதர்சனம் அல்லவா? வழக்கமாகத் தினமுமே அபிகமன ஆராதனத்தின் முடிவில் அநுஸந்திக்கப்படும் வாழித்திருநாமம், ஸ்ரீ தேசிகன் மங்களம், ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் மங்களம் முதலியவை, அன்று மிகவும் சிறப்புடன் அநுஸந்திக்கப்பட்டன. பரம நாஸ்திகர்களாக இருப்பவர்கள்கூட இத்தகைய அநுஸந்தானங்களைக் கேட்டால் அவர்களுக்கு வைதிக விஷயங்களில் ருசியுண்டாகி நன்மை பெறுவார்கள் என்பதில் கொஞ்சமும் ஸந்தேஹமே கிடையாது.

தீர்த்த விநியோகம் ஆனபிறகு ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ சடாரி ஸாதித்த பொழுது அவருடைய அருள்நோக்கம் அடியேன்மேல் பரிபூர்ணமாக விழ அதனால் அடியேன் பரமானந்த மடைந்தேன்.

அடியேன் ஒரு விதமாகப் பகவதனுபவமும் ஆத்மானுபவமுமாக அனுபவித்துக்கொண்டு ஓர் ஓரத்தில் நின்றுகொண்டிருந்தபொழுது, ஸ்ரீ அழகியசிங்கர் ம்ருத் ஸங்க்ரஹணத்துக்கு எழுந்தருளும் காலமாகிவிட்டது தெரிந்தது. 'யத்ஸரிகை' என்று ஒரு உரத்த குரல் கேட்கவும் சப்த மெல்லாம் அடங்கி நிச்சப்தமாகிவிட்டது. நடுவில் வழிவிட்டு எல்லாரும் கோஷ்டியாக நின்றார்கள். அந்தக் கூட்டத்தில் முன்னால் நின்ற நான் எங்கேயோ பின்னால் தள்ளப்பட்டு நின்றேன். ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியாயிற்று.

ஸ்ரீ அழகியசிங்கருக்கு முன்னால் ஸ்ரீ பூவராஹப் பெருமாளும் பூமிப்பிராட்டியாரும் எழுந்தருளியுள்ள ஒரு பெட்டகத்தை எழுந்தருளப்பண்ணிக் கொண்டு போனார்கள். அடுத்தாற்போல் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியாயிற்று. கூடவே ஸ்ரீ அழகியசிங்கருடைய பிருதுகளையெல்லாம் உத்கோஷித்துக்கொண்டு சில கைங்கர்யபரர்கள் சென்றார்கள். மண்டபத்தின் ஓர் ஓரம் ம்ருத் ஸங்க்ரஹணத்துக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த இடம் மங்களகரமாகப் பெருக்கி மெழுகிக் கோலம் போட்டு அலங்காரம் பண்ணப்பட்டிருந்தது. அதைச் சுற்றி அழகாக மாவிலைத் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. குத்துவிளக்குகள் ப்ரகாசித்துக்கொண்டிருந்தன. கீழே ஸங்கல்பத்துக்கு வேண்டிய ஸாமக்ரிகள் எல்லாம் வரிசையாக வைக்கப்பட்டிருந்தன. அதற்கடுத்தாப்போல யதேஷ்டமாக மண் குவித்து வைக்கப்பட்டிருந்தது. அதன் மேல் மாவிலையால் அலங்கரிக்கப்பட்ட ஒரு புது மண்வெட்டி வைக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு அலங்கரிக்கப்பட்டு மங்களகரமாக விளங்கிய அந்த இடத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் வடக்கு முகமாக எழுந்தருளியாயிற்று. அவருக்கருகில் ஓர் உயரமான அழகிய பீடத்தின்மேல் ஸ்ரீ பூவராஹப் பெருமாளும் பூமிப் பிராட்டியாரும் கிழக்கு முகமாக எழுந்தருளியிருந்தார்கள். அவர்களுக்கருகில் ஸ்ரீபாஷ்யகாரரும் ஸேவை ஸாதித்தார். ம்ருத் ஸங்க்ரஹிப்ப தென்றால் அதற்கு யஜ்ஞவராஹனும் பூமிதேவியும் அநுக்ரஹம் செய்யவேண்டும். ம்ருத் பூமிதேவியினுடையது. பூமிதேவியோ யஜ்ஞவராஹனுடைய திருத்தேவியார். இவ்விரு திருநாமங்களும் ஜகத்துக்கெல்லாம் தந்தையுந் தாயுமாக எழுந்தருளியிருக்கிறார்கள். எனவே அவர்களுடைய திவ்ய நியமனம் இல்லாமல் ம்ருத் ஸங்க்ரஹிக்க முடியுமா? இந்தத் திவ்ய தம்பதிகளும் தாங்கள் இந்த ஸங்கல்ப மஹோத்ஸவத்தை மிகவும் விமரிசையாக நடத்தத் திருவுள்ளம் பற்றினமை நன்கு தெரியும்படியாக மிகவும் கம்பீரமாகவும் ஒய்யாரமாகவும் எழுந்தருளி ஸேவை ஸாதித்தார்கள்.

ஸ்ரீ அழகியசிங்கர் ஆஸனத்தில் எழுந்தருளியவுடன், எல்லாரும் உட்கார்ந்தார்கள். அடியேனும் உட்கார்ந்தேன். சென்ற வர்ஷம் ஸங்கல்பத்தின்போது அடியேன் ஸமீபத்திலிருந்து ஒன்றையும் நன்றாகப் பார்க்க முடியாமல் போய்விட்டது. அதனால் இந்த வர்ஷம் முன் ஜாக்ரதையாக முன் பக்கத்தில் ஓரிடம் பிடித்துக்கொண்டு உட்கார்ந்தேன். அதனால் கூட்டம் நெருங்க நெருங்கக் கொஞ்சங் கொஞ்சமாகப் பின்னால் தள்ளப்பட்டபோதிலும் எதிரில் நடக்கும் விஷயங்களை ஓரளவாகவாவது ஸேவிக்க முடிந்தது.

ஸ்ரீ அழகியசிங்கர் சாஸ்த்ரோக்த க்ரமமாக மந்த்ரங்களை அநுஸந்தித்தருளியாயிற்று. ஒரு ஆராதகர் ஸ்வாமி, தம் கையில் தாள பத்ரத்தில் எழுதப்பட்டுள்ள பழைய ஸ்ரீ கோசம் ஒன்றை வைத்துக்கொண்டு பார்த்துக் கொண்டிருந்தார். நடுவில் நடுவில், அந்த அந்த ஸமயங்களில் அங்குக் கூடியிருந்த வேதாத்யயன சீலர்களான கனபாடிகளும் பெரியோர்களும் வேத மந்த்ரங்களையும் ஸூக்தங்களையும் உரக்க உத்கோஷித்து அடியோங்களையெல்லாம் ஆனந்திக்கச் செய்தார்கள். இவ்வாறு ஸ்ரீ அழகியசிங்கர் க்ரமமாகச் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் கண்டருளியாயிற்று. அப்போது அங்கு அந்தப் பெரிய பரிஷத்தில் கூடியிருந்த ஆயிரக் கணக்கான ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு ஒருவரையும் பாக்கி விடாமல், தலைக்குக் கால் ரூபாயாக அநுஜ்ஞையை உத்தேசித்துப் ப்ரஸாதித்தார்கள். பிறகு ஸ்ரீ பூவராஹனுடைய ப்ரஸாதமான சந்தனம், புஷ்பம், அடைக்காய், சர்க்கரை, தேங்காய் முதலிய ப்ரஸாதங்கள் எல்லாருக்கும் விநியோகிக்கப்பட்டன.

இவ்வாறு ஸங்கல்பம் செய்துகொண்டபின்பு ஸ்ரீ அழகியசிங்கர் ம்ருத் ஸங்க்ரஹணம் செய்தருளினார். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திருவடிக் கமலங்களையும், ஸ்ரீமத் பாஷ்யம் முதலிய ஸ்ரீகோசங்களையும், த்ரிதண்ட காஷாயங்களையும் ஏந்தும் திருக்கைகளால், ஸ்ரீ பூமிப் பிராட்டியாருடையவும் வராஹ நயினாருடையவும் திவ்ய நியமன புரஸ்ஸரமாக ம்ருத்தை ஸங்க்ரஹத்தருளினார் ஆசார்யன். அப்போது பூஸூக்தத்தின் அநுஸந்தான கோஷம் அந்த மண்ட

பம் அதிரும்படியாகவும் ப்ரதித்வனி செய்யும்படியாகவும் ஒலித்தது. ஸ்ரீ அழகியசிங்கர் அங்கிருந்த அலங்காரம் செய்யப்பட்ட மண்வெட்டியால் ம்ருத்தை அள்ளி அள்ளித் தாம்பாளத்தில் ஸங்க்ரஹித்தாயிற்று. பிறகு அந்தத் தாம்பாளத்தை ஏந்தித் திவ்யதம்பதிக ளாகிற ஸ்ரீ வராஹநயினருக்கும் ஸ்ரீ பூமிப் பிராட்டியாருக்கும் காட்டியருளியாயிற்று.

இவ்வாறு ஸங்கல்பமும் ம்ருத் ஸங்க்ரஹணமும் ஆனபின்பு, ஸ்ரீ அழகிய சிங்கர் அங்கிருந்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் ஸந்நிதிக்கு எழுந்தருளி, எம்பெரு மானையும் பெரிய பிராட்டியையும் ஸேவித்துவிட்டு, அந்தத் திவ்ய தம்பதிகளின் நியமன புரஸ்ஸரமாகவும், சிஷ்யர்களெல்லாம் தங்கள் உள்ளத்தில் உள்ள ஸந்தோஷம் தங்கள் குரலில் ப்ரதிபலிக்கும்படியாகத் தம்முடைய பிருதுகளை யெல்லாம் உச்ச ஸ்வரத்தில் அநுஸந்தித்துக்கொண்டு பின் தொடரவும், ம்ருத் ஸங்க்ரஹணத்துக்காக அமைந்த பெரிய தொட்டி இருக்கு மிடத்துக்கு எழுந் தருளி அங்கு அந்த மண்ணைச் சேர்த்தருளினர். ஸ்ரீ அழகியசிங்கரோடு அடி யோங்களுங் கூடவே சென்றோம். ஒவ்வொருவரும் நாங்கள் எங்கள் சக்திக்குத் தகுந்தவாறு அந்த மண்ணை அள்ளிக்கொண்டுபோய் அந்தத் தொட்டியில் சேர்த்தோம்.

ம்ருத் ஸங்க்ரஹணம் ஆனபின்பு ஸ்ரீ அழகியசிங்கர் திருமுடி விளக்கம் கண்டருள ஏற்பாடு செய்திருந்தார்கள். ஸ்ரீ மடத்திலிருந்து ஸுமார் அரைமைல் தூரத்தில் உள்ள பங்களாத் தோட்டம் என்னு மிடத்தில் இதற்கு ஏற்பாடு ஆகியிருந்தது. ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருள்வதற்காக ஸ்ரீ ஸந்நிதி வாசலில் அழகிய பல்லக்கு வந்து நின்றது. அதன்மேல் 'ஸ்ரீ அஹோபிலமடம் 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர்' என்னும் எழுத்துக்கள் தீட்டப்பெற்றிருந்தன. இந்தப் பல்லக்கில் இந்த ஸ்ரீ மடத்தின் முந்தின ஸ்ரீ அழகிய சிங்கர்கள் பலரும் எழுந்தருளும்போது, பெரிய ஸமஸ்தானதிபதிகளும், அந்த ஸ்ரீ அழகியசிங்கர் களோடு வாதம் செய்து தோற்றுப்போன (ஸுரபுரம் வெங்கடாசாரியர் முதலிய) பெரிய பண்டிதர்களும் பல்லக்கைத் தாங்கிச் சென்ற வைபவங்களைத் தினமும் குருபரம்பரையில் ஸேவித்துவருகிறோம். இத்தகைய பாக்யம் அடியேனுக்கும் கிடைக்காதா என்கிற ஆசை அடியேனுக்கும் இருக்கத்தான் இருந்தது. ஆயினும் என்ன செய்வது ? அதற்கு வேண்டிய ஜந்மாந்தர ஸுக்ருதமும் சேரவேண்டாமா ?

பல்லக்கில் ஒருவர் அழகிய மான்தோல் ஆஸனத்தை விரித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் அதைப் ப்ரோக்ஷித்துவிட்டு அதன்மேல் ஆரோஹணித் தருளி யாயிற்று. சில சிஷ்யர்கள் சாமரங்களை எடுத்துக்கொண்டார்கள். ஒருவர் பட்டுக்குடையை விரித்துப் பிடித்தார். சிலர் வெள்ளித் தடிகளைப் பிடித்துக் கொண்டார்கள். இவைகளில் ஒன்றுங் கிடைக்காத அடியோங்கள், ஸ்ரீ அழகியசிங்கருடைய பிருதுகளைக் கூறி, "ஸ்ரீமத்வேதமார்க்க ப்ரதிஷ்டாபநா சார்ய! பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய! ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய! ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம! ஸ்வாமி யத்ஸரிகை!" என்று உத்கோஷித்தோம். இத்தகைய வைபவத்தோடு

ஆயிரக் கணக்கில் கூடியிருந்த பெரிய சிஷ்ய ஸம்ருத்தியும் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தியுமாகப் பின் தொடர்ந்து வர, வாத்யங்கள் கோஷிக்க, திருச்சின்னம் ஒலிக்க, வைதிகர்கள் வேத பாராயணம் செய்துவர, ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியாயிற்று. வைதிக லக்ஷ்மீ தாண்டவம் புரிய, நித்யஸூரிகளின் கூட்டத்தை யொத்து விளங்கிய அந்தக் கூட்டத்தையும், அதன் நடுவில் தேஜோராசியாக விளங்கிய ஸ்ரீ அழகியசிங்கரையும், அந்த நகர வாஸிகள் அனைவரும் கண்களார ஸேவித்துக் க்ருதார்த்த ரானார்கள்.

பங்களாத் தோட்டம் மிகவும் அழகான ஒரு தோட்டம். அந்த அழகிய சோலையின் மத்தியில் ஒரு அழகான மண்டபம் விளங்குகிறது. அந்த மண்டபத்தின் அழகை, அதன் நான்கு பக்கச் சுவர்களிலேயுங் கொஞ்சமும் இடைவெளியில்லாமல் தீட்டப்பட்டுள்ள வர்ணச் சித்திரங்கள் பன்மடங்காக எடுத்துக் காட்டுகின்றன. கோயில் திருமலை பெருமாள்கோயில் எம்பெருமான்கள் அங்குச் சித்ர ரூபிகளாக ஸேவை ஸாதிக்கின்றார்கள். ஆழ்வார்களும் ஸ்ரீ கோதை நாச்சியாரும் அங்கு ஸேவை யளித்து நமது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறார்கள். திருவெவ்வுளூருக்கு வீக்ஷாரண்ய க்ஷேத்ரம் என்று பெயர்; அதைப் புண்யாவர்த்த க்ஷேத்ரம் என்றும் சொல்வார்கள். அந்த க்ஷேத்ரத்தின் மாஹாத்ம்யத்தை வர்ணிக்கும் சித்ரங்கள் அத்புதமாக அங்கு அமைந்திருக்கின்றன. ஸ்ரீமத் அத்திப்பட்டு அழகியசிங்கர் அநுக்ரஹித்துள்ள ஸ்ரீ வீக்ஷாரண்ய க்ஷேத்ர மாஹாத்ம்ய வர்ணனைகளை ஸேவித்துவிட்டு இந்த சித்ரங்களையும் ஸேவித்துவிட்டால், அப்புறம் இந்தத் திவ்யதேசத்தின் வைபவம் நமது மனத்தை விட்டு ஒருநாளும் அகலாது.

இத்தகைய மண்டபத்தின் பின் புறத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் திருமுடி விளக்கம் கண்டருள ஏற்பாடாகி யிருந்தது. பங்களாத் தோட்டத்துக்கு ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளிய பின்பு, அவர் அனுஷ்டானங்கள் பூர்த்தியாகும் வரையில் சிஷ்யர்களான அடியோங்களுக்கு விராமம்தான். இந்த நேரத்தில் ஸ்ரீ ஸந்நிதியில் அபிகமன ஆராதனத்தில் பெருமாளுக்குக் கண்டருளப்பண்ணிய ப்ரஸாதங்கள் விநியோகம் பண்ணப்பட்டன. ஸாயங்காலம் 3½-மணிக்கு மேல்தான் ததீயாராதனம் நடக்கும் என்று முன்கூட்டியே தெரியுமாதலால், அந்த ப்ரஸாதத்தை விட்டுவிட இஷ்ட மில்லாமல் அதைப் பெற்று அந்தர்யாமியை த்ருப்தி செய்துகொண்டோம்.

கோஷ்டி விநியோகம் ஆனபின்பு சிறிது நேரம் அந்த ஸந்நிதி மண்டபத்தைச்சுற்றிப் பார்த்தேன். பிறகு ஸாயங்காலமும் மறு நாளும் அதைப் பார்த்துக் கொண்டிருக்கையில் அந்த மடத்தின் பெருமையைப்பற்றிய பல நினைவுகள் அடியேனுக்கு வந்தன. அங்கு எழுந்தருளியிருந்து தர்சனத்தைத் தழைக்கச் செய்தருளிய பரந்தூர் ஸ்ரீ அழகியசிங்கர், ஸ்ரீ அத்திப்பட்டு மஹா தேசிகன் முதலிய யதி ஸிம்ஹங்கள் அடியேன் மனக் கண்ணுக் கெதிரில் தோற்ற மளித்தார்கள். அந்த ஸ்ரீ அழகியசிங்கர்கள் எழுந்தருளியிருந்து காலக்ஷேபங்கள் ப்ரஸாதித்த மண்டபத்தை ஸேவிக்கும்போது அடியேன்

ஆனந்த ஸமுத்ரத்தில் முழுகவில்லை யென்பதை இங்கு விஜ்ஞாபித்துக்கொள்ளு கிறேன். ஏனெனில்: அதற்கு முன்னாலேயே காலையிலிருந்து ஆனந்தக் கடலில் விழுந்து திளைத்துக்கொண்டிருந்த அடியேன் புதியதாக எந்த ஆனந்தக்கடலில் மறுபடியும் முழுகுவது ?

இதற் கிடையில் பங்களாத் தோட்டத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் நீராட்டங் கண்டருளி அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டருளியாயிற்று. ஸ்ரீ அழகிய சிங்கர் திரும்பி எழுந்தருளும்போது அநுயாத்ரை செய்யும் கோஷ்டியில் சேர்ந்துகொள்ள ஸ்வாமிக ளெல்லாரும் சென்றார்கள். எல்லாரோடும் அடியேனும் சென்றேன். ஸ்ரீ அழகியசிங்கர் திருப்பல்லக்கு எழுந்தருளும்போது தேதீப்யமான தேஜஸ்ஸோடு விளங்கினார். அந்தத் தேஜஸ்ஸில் எல்லாருமே ஈடுபட்டோம். ஸ்ரீ தேசிகன், ஸ்ரீ பாஷ்யகாரரை யதிராஜ ஸப்ததி என்னும் ஸ்தோத்ரத்தில் ஸ்துதி செய்யும்போது, அந்த மஹாபுருஷர் மூன்று லோகத் தார்களுடைய புண்ய பலத்தின் பரிணாமமாக அவதரித்தருளியதாக அநுபவித் தார். அந்த அநுபவம் நம் ஸ்ரீ அழகியசிங்கருக்கும் பொருந்தும் என்பதில் ஸந்தேஹமே இல்லை.

சிஷ்யர்கள் கோஷ்டி புடைசூழ ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ மடத்துக்கு எழுந்தருளியாயிற்று. பங்களாத் தோட்டத்தின் வாசல் வரையில் ஸ்ரீ அழகிய சிங்கருடைய பிருதுகளை உத்கோஷித்தோம். அதற்கப்புறம் வீதி விசாலமாக இருந்தபடியால், எல்லாரும் கோஷ்டிகளாக வரிசையாக நின்றுகொண்டு ஸ்ரீ யதிராஜ ஸப்ததி ஸ்தோத்ரத்தை அநுஸந்தித்தார்கள். ஒரு பெரிய ராஜாவாக இருப்பவன் திக்விஜயம் செய்து வெற்றியோடு திரும்பி வரும்போது அவனு டைய ப்ரஜைகள் எவ்வண்ணம் அவனை ஜயகோஷத்தோடும் ஸந்தோஷத்தோ டும் அழைத்துக்கொண்டு போவார்களோ, அவ்வண்ணம் ஸ்ரீ அழகியசிங்கரை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு சென்றார்கள். மங்களகரமாகப் பெரிய யானை முன்னால் சென்றது. பெரிய டமாரங்கள் முழங்கின. திருச்சின்னம் ஒலித்தது. பல்லக்கை அடுத்து சத்ரம் சாமரம் வெள்ளித் தடிகள் முதலியவற்றைப் பலர் ஏந்திச் சென்றார்கள். பின்னால் சென்ற கோஷ்டிகள்தான் யதிராஜ ஸப்ததியை அநுஸந்தித்தன. அந்தக் கோஷ்டியில் ஸ்ரீ தேவனார்விளாகம் ஸ்வாமி போன்ற மஹான்கள் தலைமை வஹித்துச் சென்றார்கள். வழியில் அங்கங்கே ஸுமங் கலி ஸ்த்ரீகள் ஆசார்யனுக்கு ஆலத்தி சுற்றி மங்கள வாழ்த்துக்கள் பாடிப் போற்றினார்கள். திருவெவ்வுளூரின் வீதிகளில் இத்தகைய வைபவங்களை இதற்குமுன் ஒருவரும் கண்டிருக்கமாட்டார்கள் என்பது நிச்சயம். அடி யேனைப் பற்றிய வரையில், இவ்வாறு ஊர் வலமாக ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ மடத் துக்கு எழுந்தருள்வதை ஸேவித்துக் கண் படைத்ததனாலான பயனைப் பெற்ற தாக நினைத்து மகிழ்ந்தேன்.

மடத்தின் வாசலில் சிஷ்யர்கள் எதிர்கொண்டுவந்து ஸதிர்த் தேங்காய் கள் உடைத்து, கெட்டிமேள வாத்யத்துடனும் வேத பாராயண கோஷத்துட னும் ஸ்ரீ அழகியசிங்கரை ஸ்ரீ ஸந்நிதிக்குள் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு சென்றார்கள்.

ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ ஸந்நிதிக்குள்ளே எழுந்தருளிய பின்பு சிறிது நேரம் அடியோங்களுக்கு விராமம் கிடைத்தது. அப்போது நாங்கள் எங்களுடைய மாத்யாஹ்நிக அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டோம். வழக்கமாக அடியேன் திருவெவ்வுளூருக்குப் போகும்போதெல்லாம் ஸ்நாநாதிகளை ஹ்ருத்தாபநாசினீ புஷ்கரிணியில்தான் செய்வது வழக்கம். இந்த வர்ஷம் புஷ்கரிணியில் தீர்த்த மில்லாமல் வறண்டுபோய்விட்டபடியால் சில ஸுஹ்ருத்துக்களைப் பிடித்து அவர்களுடைய உதவியால் ஒருவாறு ஸ்நாநாதிகளை முடித்துக்கொண்டேன்.

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் இஜ்யைத் திருவாராதனம் கண்டருளினார். திருமஞ்சன காலத்தில் உபநிஷத்துக்களும் புருஷ ஸூக்தமும் கம்பீரமாக உத்கோஷிக்கப்பட்டன. ஸ்ரீ அழகியசிங்கர் திரும்பி ஸந்நிதிக்குள் எழுந்தருளிய பின்பு கற்பூர ஹாரத்தியும் சாத்துமறையும் நடந்தன. உடனே ஸ்ரீ அஹோபிலம் எம்பெருமானுடைய ஸந்நிதியிலிருந்து வந்திருந்த மரியாதைகள் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸமர்ப்பிக்கப்பட்டன. அர்ச்சையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிங்கப்பிரானுடைய விபவ மூர்த்திதான் ஸ்ரீ அழகியசிங்கர். எனவே அர்ச்சையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுடைய மரியாதைகளை விபவ மூர்த்தியாகிய ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம்பற்றியது நெஞ்சை நெகிழ்விக்கும் தன்மை வாய்ந்திருந்தது. ஸ்ரீ அஹோபிலம் பெரிய பெருமாளுடைய மரியாதைகள் தவிர, இன்னும் அநேக இடங்களிலிருந்தும் மரியாதைகள் வந்திருந்தன. பகல் வேளையில் ஆக வேண்டிய கார்யங்கள் இன்னும் பாக்கியிருந்ததால், அந்த மரியாதைகளை யெல்லாம் ராத்ரி சண்ணன் டோலோத்ஸவ ஸமயத்தில் ஸமர்ப்பிக்க ஏற்பாடு செய்தார்கள்.

அதற்கப்புறம் நடந்த நிகழ்ச்சி மிகவும் முக்யமானது. ஏதோ சில மந்த்ரங்களை அநுஸந்தித்த பின்பு, பூஸூக்தம் முதலிய வேத ஸூக்தங்களை எல்லாரும் கோஷித்தார்கள். பிறகு ஸ்ரீ அழகியசிங்கர் தமது பீடத்தின்மேல் எழுந்தருளிய பின்பு, ஸ்ரீ ஸந்நிதி ஆராதகர்கள் இரண்டு இரண்டு தேங்காய்களைக் கைகளில் எடுத்துக்கொண்டு ஸ்ரீ அழகியசிங்கர் திருவடிகளில் ஸமர்ப்பித்து, ஒரு ச்லோகத்தைச் சொல்லி ஸ்ரீ அழகியசிங்கரிடம் ப்ரார்த்தித்துக்கொண்டு அநேகம் ஆவ்ருத்தி தண்டன் ஸமர்ப்பித்தார்கள். அந்த ச்லோகத்தின் பொருள் :—தேவரீர் இவ்விடத்திலேயே ஸுகமாக வஸித்தருளவேண்டும். அதனால் அடியோங்கள் க்ருதார்த்தர்களாவோம். அடியோங்களுடைய சக்திக்குத் தகுந்தவாறு அடியோங்கள் தேவரீருக்கு சுச்ரூஷைகளும் புரிகிறோம்—என்பது. இந்த ச்லோகத்தைச் சொல்லி ஸ்ரீ கார்யம் ஸ்வாமியும் மற்ற கைங்கர்யபரர்களும் தண்டன்ஸமர்ப்பித்த பின்பு இதர சிஷ்யர்களும் தங்கள் தங்கள் காணிக்கைகளை ஸமர்ப்பித்து இவ்வாறே வேண்டினார்கள். இவ்வாறு நூற்றுக்கணக்காகத் தண்டன் ஸமர்ப்பித்த சிஷ்யர்களுக்கு நடுவில் அடியேனும் ஒருவனாகத் தண்டன் ஸமர்ப்பித்தேன். இவ்வாறு தண்டன் ஸமர்ப்பித்த கைங்கர்ய பரர்களையெல்லாம் ஸ்ரீ அழகியசிங்கர் அவரவர்கள் கைங்கர்யங்களில் நியமித்துத் திருவுள்ளம் உகந்தருளியாயிற்று.

பிறகு ஸ்ரீ ஸந்நிதியில் வாழித் திருநாமமும் ஸ்ரீ தேசிகன் மங்களம் முதலிய ஸ்தோத்ரங்களும் ஆசார்யர்களின் தனியன்களும் அநுஸந்திக்கப் பட்டன. விநியோகம் ஆனபிறகு ததீயாராதனம் மிகவும் சிறப்புடன் நடத் தப்பட்டது.

ஸாயங்காலம் ஸ்ரீ அழகியசிங்கரைத் தண்டன் ஸமர்ப்பித்துவிட்டு மந்த் ராக்ஷதை பெற்றுக்கொண்டு புறப்படவேண்டும் என்பதுதான் அடியே னுடைய விருப்பம். அத்தோடு அடியேன் ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரத்தைப் பற்றி சில விஷயங்கள் எழுதியிருந்தேன். அவற்றை ஸ்ரீ அழகியசிங்கர் திருச் செவி சாற்றவேண்டுமென்பதும் அடியேனுடைய ஆசை. அன்று ததீயா ராதனம் முடிவதற்கே மணி 5 ஆகிவிட்டபடியால், அன்று மந்த்ராக்ஷதை பெற்றுக்கொண்டு புறப்படுவதற்கு முடியாமற் போய்விட்டது. எனவே ராத்ரி நடந்த கண்ணனுடைய டோலோத்ஸவத்துக்கும் இருந்து அந்த அத்புத ஸேவையையும் பெற்று மகிழ்ந்தேன்.

விஷயங்களை மிகவும் சுருக்கமாக விண்ணப்பிக்கவேண்டிய அடியே னுக்கு, கண்ணன் கண்டருளிய டோலோத்ஸவத்தின் அழகையும், அவர் தம்மு டைய விபூதிகளாகிய பெண் குழந்தைகளின் கான ரஸத்தைத் திருச்செவி சாத்தி அடைந்த மகிழ்ச்சியையும், ஸ்ரீ அழகியசிங்கர் அந்தத் திருவோலக்கத் துக்கு எழுந்தருளியவுடன் பெரிய கனபாடிகளெல்லாம் ஸுமார் அரை மணி நேரம் கம்பீரமாக ஸ்வஸ்திவாசகங்களான வேத ஸூக்தங்களை அநுஸந்தித்து பல மந்த்ராக்ஷதைகளை ஜபித்த சிறப்பையும், இன்னும் இத்தகைய பல்வேறு விஷயங்களையும் பற்றி ஒன்றும் கூறாமல் விடவேண்டியிருப்பது வருத்தமாகத் தான் இருக்கிறது. அதற்காக வாசகர்கள் க்ஷமித்தருளவேண்டும்.

டோலோத்ஸவ ஸமயத்தில் ஸ்ரீ அழகியசிங்கருக்குத் திவ்யதேசங்களி லிருந்து கொண்டுவரப்பட்டிருந்த மரியாதைகளெல்லாம் ஸமர்ப்பிக்கப்பட் டன. இந்த வைபவம் ஸுமார் அரை அல்லது முக்கால் மணி நேரம் நடந்தது. இவ்வாறு மரியாதைகளை ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம்பற்றியவுடன், பெரிய பெருமாளுக்கு ஸம்பாவனை செய்யப்பட்டது. பிறகு ஒரு ஸ்வாமி எழுந்து, "இந்தச் சாதுர்மாஸ்ய ஸங்கல்பம் யதாசாஸ்த்ரம் அநுஷ்டிக்கப்பட்டதினால் ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் மிகவும் திருவுள்ளம் உகந்தவனாகவேண்டும்" என்று ஸாதித்த பின்பு, உச்ச ஸ்வரத்தில் வேத பஞ்சாதிகளின் கோஷத்தோடு சந்தனம் புஷ்பம் அடைக்காய் முதலியவைகள் வழங்கப்பட்டன. திவ்ய தேசத்து மரியாதைகளாக வந்திருந்த நூற்றுக்கணக்கான மாலைகளையெல்லாம் வந்திருந்த ப்ரமுகர்களான சிஷ்யர்களுக்கு வழங்கி மரியாதை பண்ணினார்கள். வந்திருந்த பெரியோர்களில் மிகவும் ப்ரதானமானவர் ஸ்ரீ.உப. தேவனார்விளாகம் ஸ்வாமியானதால், அவர் கழுத்தில் ஒரு பெரிய ஹாரத்தைச் சாத்தியவுடன் ஸ்ரீ அழகியசிங்கருக்குத் திருவுள்ளம் உகந்ததுபோலவே அடியோங்களும் ஸந்தோஷித்தோம்.

இவ்வாறு எல்லாருக்கும் சந்தனம் புஷ்பம் முதலியவை வழங்கப்பட்ட பின்பு, இந்த மஹோத்ஸவத்துக்காக வந்திருந்த சிஷ்யர்கள் ஆசார்யனை ஸேவித்து

விட்டு அவரால் அநுக்ரஹிக்கப்பட்டு, பல மந்த்ராக்ஷதைகளைப் பெற்றுக்கொண்டு தங்கள் ஊருக்குக் கிளம்ப ஏற்பாடு செய்துகொண்டார்கள்.

அடியேன், ஸ்ரீ கார்யம் ஸ்வாமி நியமித்ததன் பேரில் மறுநாளும் அங்கிருக்க நிச்சயித்தேன். மறுநாளும் அநேக ஸ்வாமிகள் இருந்தபடியால் அன்றும் உத்ஸவம் சிறப்பாகவே இருந்தது. அன்று வட தேசங்களிலிருந்து சில ப்ரமுகர்களாகிய சிஷ்யர்கள் வந்திருந்து பெருமாளை ஸேவித்தார்கள். அவர்களோடுகூட நூற்றுக்கணக்கான மார்வாரி ஸேவார்த்திகளும் வந்து பெருமாளையும் ஸ்ரீ அழகியசிங்கரையும் ஸேவித்து க்ருதார்த்தரானார்கள்.

அன்று பகல் முழுதும் திவ்யதேசங்களிலிருந்து மரியாதைகள் கொண்டு வந்தவர்களுக்கு ஸம்பாவனை பண்ணுவதற்குத்தான் ஸ்ரீ அழகியசிங்கருக்கு அவகாசம் ஸரியாக இருந்தது. அதனால் அடியேன் ஸ்ரீ அழகியசிங்கரைத் தண்டன் ஸமர்ப்பிக்க ஸாயங்காலம் வரையில் அவஸர ப்ரதீக்ஷணை அங்கு உட்கார்ந்திருந்தேன். ஸாயங்காலம் ஸுமார் 6 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கர் காலக்ஷேப மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும்போது ஸ்ரீ கார்யம் ஸ்வாமி நியமிக்க, அடியேன் ஸ்ரீ அழகியசிங்கரைத் தண்டன் ஸமர்ப்பித்துவிட்டு அடியேனுடைய புன்சொல்லால் ஆகிய வ்யாஸத்தையும் ஸ்ரீ அழகியசிங்கரிடம் விண்ணப்பித்துக்கொண்டேன். குழந்தைகள் பேசும் மழலைப் பேச்சும் பெற்றோருக்குப் பரம போக்யமாக இருப்பதுபோல அடியேன் வாசித்த விஷயமும் ஸ்ரீ அழகியசிங்கருடைய திருவுள்ளத்துக்கு மிகவும் உகப்பாகவே இருந்தது.

அதற்குப் பின் ஸ்ரீ அழகியசிங்கர் அநுக்ரஹித்த பல மந்த்ராக்ஷதைகளைப் பெற்றுக்கொண்டு, அடியேன் விடைகொள்ளும்போது, அடியேனுடைய மனது மிகவும் ஸந்தோஷமாக இருந்தது. "நான் பெற்ற பேறு மற்று யார் பெற்றார் இந்த நானிலத்தே?" என்று அநுஸந்தித்துக்கொண்டே பெரிய பெருமாளை ஸேவித்துவிட்டு அங்கிருந்து விடைகொண்டேன்.

இத்தகைய ஸ்ரீ அழகியசிங்கர் இன்னும் பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து அடியோங்களைப் பரிபாலித்தருளவேண்டும் என்னும் ப்ரார்த்தனையோடு இந்த வ்யாஸத்தை முடித்துக்கொள்கிறேன்.

---

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஏஜென்ஸி நிபந்தனைகள்.

ஒரு தடவையில் 10 பிரதிகளுக்குக் குறையாமல் எடுத்துக்கொள்ளுபவர்களுக்கு 100-க்கு 20 வீதம் கமிஷன் கொடுக்கப்படும். ஏஜண்டுகள் காபி 1-க்கு 4 அணா வீதம் டிபாஸிட் கட்டவேண்டும். புதிய சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பதற்கும் கமிஷன் கொடுக்கப்படும். மற்ற விவரங்களுக்கு நேரில் ஆபீஸுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

# ஆஸ்திக்யம்

[ஸ்ரீ தேசிக தர்சந விஜயத்வஜ புத்தன்கோட்டகம் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான், ஸ்ரீரங்கம்]

இவ்வுலகத்தில் மனிதனுகப் பிறந்தவன் நமது வேத சாஸ்த்ரங்களில் சொல்லப்படும் அரிய விஷயங்களில் நம்பிக்கையாகிற ஆஸ்திக்யத்தோ டிருக்க வேண்டியது அவச்யம். ஏனென்ருல்,

" நாயம் தேஹோ தேஹபாஜாம் ந்ருலோகே கஷ்டாந் காமாநர்ஹதே
விட்புஜாம் யே ।
தபோ திவ்யம் புத்ரகா யேந ஸத்த்வம் ஶுத்த்யேத் யஸ்மாத் ப்ரஹ்மஸௌக்யம்
த்வநந்தம்"

(ஸ்ரீ பாகவதம் ஸ்கந்தம் 1—5)

என்று ஈச்வரனுடைய அவதாரபூதனுன ருஷப தேவன் உபதேசித்தான். கர்ம வசத்தினுல் மரம் செடி பசு பக்ஷி ரூபங்களான பற்பல தேஹங்களை அடைகிற ஜீவாத்மாக்களுக்கு மநுஷ்ய ஜாதியில் கிடைத்த தேஹமானது விஷ்டைகளைப் புஜித்திருக்கிற நாய் பன்றி முதலிய திர்யக்குகளும் கூட அநுபவிக்கிற துக்க மயங்களான சிற்றின்பங்களை அநுபவிப்பதற்காக உண்டானதன்று. வேறு எதற்காக வென்ருல், எப்படிப்பட்ட மனஸ்ஸின் சுத்தியினுல் அளவிறந்த ஆநந்த மான ப்ரஹ்மாநந்தத்தை மனிதன் அடையக்கூடுமோ, அப்படிப்பட்ட மநஸ்ஸின் தெளிவுக்குக் காரணங்களான புண்ய காரியங்களைச் செய்வதற்காகவே. இந்த விஷயம் பாரதம் சாந்திபர்வம் பராசர கீதையிலும் வ்யக்தமாகச் சொல்லப் படுகிறது. 'உபபோகைரபி த்யக்தம் நாத்மாநமவஸாதயேத்' மனிதனுகப் பிறந் தவன், தனக்கு இவ்வுலக வாழ்க்கையில் ஸுக ஸாதநங்களாக நினைக்கப்படுகிற வீடு தநம் பத்நீ புத்ரன் முதலிய வஸ்துக்க ளில்லையே யென்று வருத்தப்படக் கூடாது. ஏனென்ருல் பத்நீ புத்ரன் முதலிய இவ்வுலகத்துச் சிற்றின்ப ஸாதந வஸ்துக்கள் நாய் பன்றி முதலிய திர்யக்குக்களுக்கும் பொதுவாக இருப்பதால்; அவைகள் மநுஷ்ய ஜந்மத்திற்கே அஸாதாரணமான ப்ரயோஜந மல்ல வாகை யினுல் அவை இல்லாமையைக் குறித்து மனிதனுகப் பிறந்தவன் வருந்தக் காரண மில்லை யல்லவா? எந்த வஸ்து எந்த ப்ரயோஜநத்திற்காக ஈச்வரனுல் உண்டாக்கப் பட்டதோ, அது அந்த ப்ரயோஜநத்தை அடையாமல் இழந்திருந்தால் 'அது வீணுகப் போய்விட்டதே' என்று வருத்தப்படுவது உசிதமாகு மென்று அபிப்ராயம்.

மநுஷ்ய ஜந்மத்திற்கு இவ்வுலகத்துச் சிற்றின்ப ஸுகங்கள் ப்ரயோஜந மல்ல வென்ருல் வேறு எது மநுஷ்ய ஜந்மத்திற்கு ப்ரயோஜநமாகு மென்று கேட் டால் அதைச் சொல்லுகிறது 'அஜ்ஞாநேநைவ மாநுஷ்யம் ஸர்வதா தாத

ஸொஹநழ' என்னும் வாக்யம். மநுஷ்ய ஜாதிகளுக்குள் சண்டாளனுகப் பிறந்திருந்தாலும் அது ஸர்வாவஸ்தையிலும் மங்களத்தைக் கொடுக்கக்கூடியது. இவ்வுலக வாழ்க்கையில் சிற்றின்ப ஸுகம் ஒன்று மில்லாத மனிதனுக்கு மநுஷ்ய தேஹம் என்ன மங்களத்தைக் கொடுக்கப்போகிற தென்று கேட்டால் அதைச் சொல்லுகிறது மேல் வாக்யம்.

" உயம் ஹி யொநிঃ வூயஉா யம் வூாவதூ வரயிவிவதெ ।
ஞூகா வெவ ஶகூதெ தூாதஙம் கஉஉஹிஶூஹமுகூஷணெঃ ॥ "

இங்கு 'வெ' என்கிற பதம் 'ணவ' என்கிற சப்தத்தின் ஸ்தாநத்தில் படிக்கப் பட்டிருப்பதால் அவதாரணத்தைச் சொல்லுகிறது. அது 'யம் வூாவதூ' என்பதோடு அந்வயிப்பதனுல், 'ஓ அரசனே! எந்த மநுஷ்ய ஜந்மத்தை அடைந்தால் தான் அதன் மூலமாகப் புண்ய கர்மங்களைச் செய்வதனுல் ஆத்மாவை ரக்ஷிக்க முடியுமோ, அப்படிப்பட்ட மநுஷ்ய ஜந்மங்களுக்குள் இந்தச் சண்டாள ஜந்மமானது முதலானது' என்கிற அர்த்தம் ஏற்படுகிறது. இதனுல் ஆத்ம ரக்ஷணத்திற்கு ஹேதுக்களாய்ச் சண்டாள ஜாதிக்கு மேற்பட்டதான பல ஜாதிகள் மநுஷ்ய ஜாதியின் உட்பிரிவுகளாக இருக்கின்றன வென்று ஸூசிப்பிக்கப்படுகிறது. ஆக, இங்கு சொல்லப்பட்ட பாகவத பாரத ச்லோகங்களினுல், இவ்வுலகத்தி லிருக்கின்ற ஸ்தாவரங்கள் திர்யக்குகள் மநுஷ்யர்கள் என்கிற மூன்று வகைகளான ஈச்வர ஸ்ருஷ்டிகளுக்குள் மரஞ் செடி முதலிய ஸ்தாவர ஜந்மங்களிலும் பசு பக்ஷி முதலிய திர்யக் ஜந்மங்களினுலும் தர்மங்களை அநுஷ்டிக்க முடியாததனுல், அவைகள் ஆத்மாவை ரக்ஷிக்க யோக்யங்க ளல்ல என்கிற விஷயமும், மநுஷ்ய ஜந்மம் ஒன்றுக்கே தர்மாநுஷ்டாந யோக்யதை இருப்பதனுல், அதனுல்தான் பிணி பசி மூப்பு ஜந்ம மரணுதி துன்பங்கள் ஒழிந்து சாச்வத ப்ரஹ்மாநந்தாநுபவ மாகிற ஆத்ம ரக்ஷணத்தை அடையலா மென்கிற விஷயமும் சொல்லப்பட்டதாகின்றன.

இப்படி, ஸ்தாவர திர்யக் ஜந்மங்களுக் கில்லாததாய் மநுஷ்ய ஜந்மங்களுக்கு மாத்ர மிருக்கிறதான ஆத்ம ரக்ஷண ரூபமான மேன்மையை நினைத்து 'ஹூதா நாம் வூாணிநঃ ஶெஷ்ூாঃ * * பஙூஜீவிகஸஹ நஶாঃ ஶ்ரெஷ்ூாঃ' என்று ஸ்தாவர ஜங்கமங்களைக் காட்டிலும் மனிதன் உயர்ந்தவ னென்று மநு ஸ்ம்ருதி சொல்லுகிறது. இப்படி மநுஷ்ய ஜந்மத்தின் மேன்மைக்குக் காரணமான தர்மாநுஷ்டாநத்தினு லுண்டாகிற ஆத்ம ரக்ஷண ரூப ப்ரயோஜநமானது, மற்றும் ஸ்தாவர ஜங்கம ஜந்மங்களுக்கு இல்லாமல், மநுஷ்ய ஜந்மத்திற்கே ஸம்பாவிதமான அஸாதாரண ப்ரயோஜநமாக இருப்பதால், இந்த ப்ரயோஜநத்தைச் செய்யாத ஓர் மனிதன் 'உஜீயாராஉঃ' என்கிறபடியே பற்பல சிற்றின்பங்களோடு வாழ்ந்திருந்தாலும், மநுஷ்ய ஜந்மத்திற்கு அஸாதாரண ப்ரயோஜநமான தர்மாநுஷ்டாந மில்லாமையாலே அவனுடைய மநுஷ்ய ஜந்மம் பயனற்றதாக ஆகிறது என்று பகவத் கீதையில்,

ணவம் வூவதிஉதம் அகூம் நா நுவதஉயதீஹ யঃ
ஃவாயஙிஜீயாராஉொ ஔஉவம் வாயஉ ஸ ஜீவதி ॥

என்கிற ச்லோகத்தினல் சொல்லப்படுகிறது. இப்படியே தர்மாநுஷ்டாநத்திற்கு யோக்யனன மனிதனுக்கும் அந்த யோக்யதை இல்லாத ஆடு மாடு முதலான திர்யக்குக்களுக்கும் ஆஹாரம் நித்ரை பயம் மைதுநம் இவைகள் துல்யங்களாக இருக்கின்றன. தர்மாநுஷ்டாநத்துக்குக் காரணமான ஆத்ம ஜ்ஞாநம் மனிதனைகப் பிறந்தவனுக்கு அதிகம். மனிதனுக்கு அந்த ஆத்ம ஜ்ஞாநம் இல்லாதபக்ஷத்தில் அவன் நாற்கால் ஜந்துக்களுக்கு (பசுக்களுக்கு) ஸமாநமாகிறுன் என்று

" ஆஹாரநித்ராபயமைதுநாநி ஸமாநமேதத் பஶுபிர்நராணாம் ।
விஜ்ஞாநமேகம் அதிகம் நராணாம் ஜ்ஞாநேந ஹீந: பஶுபிஸ்ஸமாந: ॥ "

என்கிற ஆக்நேய புராண வாக்யமும் சொல்லுகிறது. ஆக: இந்த வசநங்களினல் மநுஷ்ய ஜந்மத்திற்கு முக்யமான ப்ரயோஜநம் ஆத்ம ரக்ஷணத்திற்கு ஹேதுவான ஆத்ம ஜ்ஞாநத்தோடு கூடின ஸ்வதர்மாநுஷ்டாநந்தான் என்று முடிந்தது.

இப்படிப்பட்ட ஆத்ம ஜ்ஞாந தர்மாநுஷ்டாநங்கள் வேதம் முதலிய ஶாஸ்த்ரங்களில் நம்பிக்கை உள்ளவர்களுக்கே ஸம்பாவிதங்கள். வேத ஶாஸ்த்ரங்களில் நம்பிக்கை யில்லாத மனிதர்களுக்கு ஆத்ம ஜ்ஞாந தர்மாநுஷ்டாநங்கள் அஸம்பாவிதங்கள். ஆகையினுலும் இப்படிப்பட்ட நம்பிக்கைதான் ஆஸ்திக்யமென்று ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படுவதாலும், இந்த ஆஸ்திக்யமே மனிதனைகப் பிறந்தவனுக்கு மநுஷ்யத்தன்மைக்கு ஹேதுவாக இருப்பதால் இது மனிதனுக்கு மிகவும் முக்யமானதாகிறது. ஆகையினல் மனிதனைகப் பிறந்தவன் தனக்கு மநுஷ்யத்தன்மை ஸித்திப்பதற்காகவும், ம்ருகத்தன்மை வராதிருப்பதற்காகவும், நாஸ்திக்யத்தைவிட்டு ஆஸ்திகனைகவே இருக்கவேண்டியது அவச்யம்.

இப்படி ஆஸ்திக்யத்திற்கு இவ்வுலக வாழ்க்கையில் ப்ரயோஜந மிருப்பதோடு ஆஸ்திக்ய மில்லாமல் நாஸ்திகனைக இருந்தால்,

" ஶ்ருதிவித்வேஷிணோ மூர்க்கா: நாஸ்திகா: பூர்வநிஶ்சயா: ।
நிர்திஷ்டாஸ்தே நிரயகா: வ்ரஜந்த்யேவாயஶாம் கதிம் ॥ " என்றும்

" நாஸ்திகஶ்சைவ யோ மூர்க்க: ஶ்ருகாலஜாதிம் ஸ கச்சதி "

என்றும் பாரதம் அநுஶாஸந பர்வத்தில் 206-208 அத்யாங்களில் ஸர்வஜ்ஞரான பரமசிவன் சொல்லியிருப்பதால், அடுத்த ஜந்மங்களில் ஆடு மாடாகப் பிறந்து கஷ்டப்படாமலிருப்பதற்காகவும் மனிதன் நாஸ்திக்யத்தை விட்டு ஆஸ்திக்யத்தோடிருப்பதே உசிதம். ஆகையினு லன்றோ

" யே ஸ்தேநபதிதா: க்லீபா: யே ச நாஸ்திகவ்ருத்தய: ।
தாந் ஹவ்யகவ்யயோர்விப்ராந் அநர்ஹாந் மநுரப்ரவீத் ॥ "

என்று மநுஸ்ம்ருதி 3-வது அத்யாயத்தில் நாஸ்திகர்களான ப்ராஹ்மணர்கள் தேவகார்யம் பித்ரு கார்யம் முதலிய தர்ம கார்யங்களுக்கு அயோக்யர்களென்று தூஷித்திருப்பது.

## ஆஸ்திக்யத்தின் மஹிமை.

பாரதம் உத்யோக பர்வத்தில் த்ருதராஷ்ட்ரனால் அனுப்பப்பட்ட ஸஞ்சயனைப் பார்த்துத் தர்மபுத்ரன்,

"யச்ச கிஞ்சிதிதம் வித்தம் ஸர்வாம் ப்ருதிவீம் யச்சைவ தேவாநாம்
த்ரிதசாநாம் ஸர்வம் யத் ।
ப்ராஜாபத்யம் த்ரிதிவம் ப்ரஹ்மலோகம் நாதர்மத: ஸஞ்ஜய காமயேயம் ॥"

[தர்மத்துக்கு விருத்தமாய் இந்தப் பூலோகத்தி லிருக்கும் ஸர்வ விதங்களான ஐச்வர்யம் கிடைத்தாலும் அப்படியே தேவலோகத்து ஐச்வர்யம் கிடைத்தாலும் அதற்கு மேற்பட்டதான நவ ப்ரஜாபதிகளுடைய ஐச்வர்யம் கிடைத்தாலும் அதற்கும் மேற்பட்ட சதுர்முகனுடைய ஐச்வர்யம் கிடைத்தாலும் அவைகளையெல்லாம் தர்ம விருத்தங்கள் என்கிற காரணத்தினால் நான் ஆசைப்பட மாட்டேன்] என்று சொன்னார். இதனால் தர்மபுத்ரனுக்குத் தர்ம விஷயத்திலிருக்கிற ஆஸ்திக்யம் வெளியாகிறது.

அப்படியே சந்தனு என்கிற அரசனுக்குப் புத்ரனான பீஷ்மர் சந்தனு ராஜனுக்கு உத்தர க்ரியைகளைச் செய்யும்போது அந்த சந்தனு ராஜனைக்குறித்துப் பிண்ட தானத்தைப் பண்ணுகிற ஸமயத்தில், ப்ரம்ஹ ஜ்ஞானத்தோடு விஷய விரக்தனான தன் புத்ரனிடத்தில் அதிக ப்ரீதியினாலே பூமியைப் பிளந்து தன் கையை நீட்டி அந்தப் பிண்டத்தைத் தன் கையில் கொடுக்கும்படி சந்தனு கேட்டதற்குப் பீஷ்மர், 'பிண்ட தானத்தை உம்மைக் குறித்தே நான் கொடுத்தாலும் அதைப் பூமியின் மேல் தர்ப்பங்களைப் போட்டு அந்தத் தர்ப்பங்களின்மேல் வைக்கும்படி சாஸ்த்ரம் விதித்திருப்பதால், சாஸ்த்ரத்திற்கு விருத்தமாய் நான் உம்முடைய கையில் பிண்டத்தைக் கொடுக்கமாட்டேன்' என்று சொன்னார். அதைக் கேட்ட சந்தனு மஹாராஜன் பீஷ்மருக்கிருந்த சாஸ்த்ர நம்பிக்கைக்கு ஸந்தோஷப்பட்டு 'இப்படி சாஸ்த்ரத்தில் நம்பிக்கையுள்ள நீ எத்தனை கால மிவ்வுலகத்தி லிருக்க வேணு மென்று நினைத்தாலும் அவ்வளவு காலம் ஜீவித்திருக்கக் கடவாய். உனக்கு இங்கிருக்கவேண்டா மென்று தோன்றின பொழுது தேஹம் போகட்டும்' என்று ஸ்வச்சந்த மரணத்தை வரமாக அளித்தான் என்று பாரதத்தில் சொல்லப்படுகிறது. இதனால் பீஷ்மருடைய ஆஸ்திக்யத்தின் மஹிமை வெளியிடப்பட்டதாகிறது.

இப்படி ஸர்வ மனிதர்களுக்கும் ஆத்ம ரக்ஷணத்திற்கு ப்ரதான காரணமாக இருக்கிற ஆஸ்திக்ய குணமானது, இவ்வுலக ஸ்திதியை ப்ரம மில்லாத ஸமீசீந ப்ரத்யக்ஷத்தினாலும், ஸ்வர்க்காதி பரலோக ஸ்திதியை வேத சாஸ்த்ர விசார மூலமாகவும் அறிந்த புத்திமானுக்கு அவசியம் ஸம்பாவிதமாகு மென்று முண்டகோபநிஷத்திலிருக்கிற

"பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாத்
நாஸ்த்யக்ருத: க்ருதேந। தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத்
ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்"

என்கிற வாக்யம் சொல்லுகிறது.

ஸ்ரீ:

# செய்திகள்

## ஸ்ரீ ஆழ்வார் ஸபை, அவளூர்

**ஆழ்வார் ஸபை:**—வடார்க்காடு ஜில்லா அரக்கோணம் தாலுக்கா அவளூர் அக்ரஹாரத்தில் சுமார் 15 வர்ஷங்களுக்கு முந்தி, ஸ்ரீ ஸந்நிதியில் பெருமாள் தாயார் ஆழ்வார் ஆசார்யர்கள் இவர்களின் திரு நக்ஷத்ரங்களை நடத்தும் பொருட்டு 'ஆழ்வார் ஸபை' என்றொரு ஸபை ஸ்தாபிக்கப்பட்டு, அந்த ஸபையின் சார்பில் திரு நக்ஷத்ரங்கள் யாவும் நன்கு நடத்தப்பட்டு வந்தன. த்ரவ்ய லோபத்தினாலும், அதைத் திறம்பட நடத்துவா ரில்லாமையாலும், ஷை ஸபை காலக்ரமேண நின்று போய்விட்டது. அதைப் புநருத்தாரணம் பண்ணி முன்போல் ஸந்நிதியில் திருநக்ஷத்ரங்களைப் பண்ணிவர வேண்டு மென்ற ஊக்கம் உண்டாய், 18—8—50 வெள்ளிக்கிழமை யன்று ஷை ஸந்நிதியில் ஒரு பொதுக் கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் ஏழுபேர் கமிட்டி மெம்பர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அவ்வெழுவரில் ஸ்ரீமான் K. ஸுதர்சநாசார்யர் தலைவராகவும், ஸ்ரீமான்கள் பி. நரஸிம்மாசார்யரும், பு. நரஸிம்மாசார்யரும் கார்யதர்சிகளாகவும், ஸ்ரீமான் T. S. அநந்தாசார்யர் பொருள் சேமிப்பாளராகவும், ஸ்ரீமான்கள் பு. க்ருஷ்ணஸாமி ஐயங்கார், T. சாரங்கபாணி ஐயங்கார், V. S. ராமன் ஆகிய மூவரும் கமிட்டி மெம்பர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இந்த ஸபையின் வருஷச் சந்தா ரூ. 2/- மற்றும் இவ்வூரில் நடைபெறும் சுபாசுப கர்மங்களில் தர்சந ஸம்பாவனை மூலமாகவும் ஷை ஸபைக்கு த்ரவ்யம் முன்போல் சேகரிக்கும்படி தீர்மானிக்கப்பட் டிருக்கிறது. ஆஸ்திக மஹான்கள் இந்த ஸபைக்கு அங்கத்தினர்களாகச் சேர்ந்து, இது தினே தினே அபிவ்ருத்தி யடையும்படி த்ரவ்ய ஸஹாயம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

**ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம்:**—பர்வ காலங்களில் மழை யில்லாமல் பஞ்சம் தாண்டவ மாடுவது தவிர்கைக்கும், உலக க்ஷேமம் உண்டாகும்பொருட்டும், இவ்வக்ரஹாரிகாள் ஒரு மண்டல காலம் இவ்வக்ரஹார வீதியில் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணத்தைத் தினம் ஸாயம் ஸந்த்யாவந்தநாநந்தரம் பாராயணம் செய்து வருகிறார்கள். இப்பாராயணத்தின் சாத்துமறையும் ஸ்ரீ தேசிகன் சாத்துமறையும் ஒரே நாளில் நிகழ்வதால், இவ்விரண்டு மஹோத்ஸவங்களையும் சிறப்புற நடத்தவேண்டு மென்று அபிஸந்தி ஏற்பட்டிருப்பதால், ஆஸ்திக மஹான்கள் இந்தக் கைங்கர்யத்துக்கும் தங்களாலான த்ரவ்ய ஸஹாயம் செய்து மஹோத்ஸவங்களைச் சிறப்பாக நடத்தவேண்டு மென்று ப்ரார்த்திக்கிறோம்.

கோ. ஸுதர்சநாசார்யர்,
தலைவர்.

பி. நரஸிம்மாசாரியர்
பு. நரஸிம்மாசாரியர்
கார்யதர்சிகள்

* * * * * * *

## திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்

### ஸ்ரீ ஆண்டாள் திரு நக்ஷத்ர வைபவமும் சுதந்திர தினக் கொண்டாட்டமும்

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் திருவல்லிக்கேணி ரத வீதியிலுள்ள ஸ்ரீ அஹோபில மடத்தில் 15—8—50 செவ்வாய்க்கிழமை காலை 7-30 மணிக்கு ஸ்ரீ ஆண்டாள் திரு நன்னாட் கொண்டாட்டம் ஆரம்ப மாகியது. ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம பாராயணம், திருப்பாவை, தையொரு திங்கட்பாமாலை ஸேவை நடந்தேறியது. காரியதரிசி பேசுகையில், இவ்வாண்டு சுதந்திர தினம் திருவாடிப்பூர நன்னாளில் அமைந்தது பின் வரப்போகும் விசேட நன்மைகளை அறிவிக்கிற தென்றும், ஸ்ரீ ஆண்டாள் ஸ்ரீ அழகிய

சிங்கர் முதலியோர் அநுக்ரஹத்தால் நாடு செழிப்படைவது நிச்சயம் என்றும் கூறினர். வித்வான்கள் ஸ்ரீ. உப. நரஸிம்மாசாரியர், பந்தல்குடி திருமலை அய்யங்கார், மேல்மா நரஸிம்மதாதாசாரியர், முறையே 'கோநோபநிடதம்' 'ஸ்ரீ ஆண்டாள் சந்திரகலாமாலை' 'ஸ்ரீ ஆண்டாள் திருக்கல்யாணம்' எனும் விஷயங்கள் பற்றி விரிவாக உபந்யஸித்தனர். மாலை 6-15 மணிக்குக் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது.

ப. ரே. திருமலை அய்யங்கார்
காார்யதரிசி.

---

## ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா சந்தா வரவு 1950வரு ஆகஸ்ட்டுமீ

| சந்தா நெ. | | பெயரும் விலாஸமும். | வர்ஷம் | தொகை. |
|---|---|---|---|---|
| | | | | ரூ. |
| 3 | ஸ்ரீ. | M. ஸ்ரீநிவாஸாசாரியர், மைலாப்பூர், சென்னை | 50 | 3 |
| 16 | ,, | C. S. ஐயங்கார், பம்பாய் | 49—51 | 9 |
| 32 | ,, | P. S. திருமலை ஐயங்கார், விருதுநகர் | 47—51 | 15 |
| 45 | ,, | R. ரங்காச்சாரியர், Asst. Audit Officer, பவநகர் | 49—50 | 6 |
| 49 | ,, | K. S. கோபால ஐயங்கார், Dy. Supt. of Police, மங்களூர் | 49—Aug. 51 | 8 |
| 59 | ,, | A. ரங்காசாரியர், காரைக்குடி | 50 | 3 |
| 80 | ,, | S. வெங்கடரங்க ஐயங்கார், கங்கவல்லி | 50 | 3 |
| 81 | ,, | K. R. கிருஷ்ணஸாமி ஐயங்கார், மாம்பலம் | 50—51 | 6 |
| 82 | ,, | N. K. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், கிண்டி | 50 | 3 |
| 90 | ,, | C. V. ராஜகோபாலாசாரிவர், ஸ்ரீரங்கம் | 50 | 3 |
| 93 | ,, | R. லக்ஷ்மண ஐயங்கார், துவரிமான் | 49 | 3 |
| 99 | ,, | R. ஸந்தானம் ஐயங்கார், தி. நகர், சென்னை | 50 | 3 |
| 112 | ,, | V. நாராயண ஐயங்கார், பெங்களூர் | 50 | 3 |
| 113 | ,, | V. கோபாலஸாமி ஐயங்கார், பெங்களூர் | 50 | 3 |
| 123 | ,, | S. ரங்கஸாமி ஐயங்கார், தி. நகர், சென்னை | 49—50 | 6 |
| 171 | ,, | S. ரங்காசாரி, தென்காசி | 49—50 | 6 |
| 178 | ,, | C. V. ஜகந்நாதாசாரியர், கும்பகோணம் | 50 | 3 |
| 179 | ,, | K. R. ராமஸ்வாமி ஐயங்கார், திருவல்லிக்கேணி | 50 | 3 |
| 185 | ,, | ஸ்ரீநிவாஸஸுந்தர ஐயங்கார், திருநெல்வேலி | 50 | 3 |
| 190 | ,, | R. ஸௌந்தரராஜன், மதுரை | 50 | 3 |
| 195 | ,, | R. ராமஸ்வாமி ஐயங்கார், கோலார் | 50 | 3 |
| 226 | ,, | A. R. நரஸிம்ம ஐயங்கார், விருதுநகர் | 49—50 | 6 |
| 233 | ,, | M. ராஜகோபாலன், ஹௌரா | 50 | 3 |
| 260 | ,, | T. S. ராமண்ணா, பஸவங்குடி, பெங்களூர் | 49—50 | 6 |
| 264 | ,, | C. R. கிருஷ்ணமாசாரியர், அட்வொகேட், கடலூர் | 50 | 3 |
| 269 | ,, | R. ஸ்ரீநிவாஸகோபாலாசாரி, வக்கீல், புதுக்கோட்டை | 50 | 3 |
| 290 | ,, | T. A. ராஜகோபால ஐயங்கார், திருப்பத்தூர் | 50 | 3 |

| சந்தா நெ. | பெயரும் விலாஸமும். | வர்ஷம் | தொகை. |
|---|---|---|---|
| 380 | ஸ்ரீ. K. ராமாநுஜாசாரியர், பண்ருட்டி | 48—50 | 9 |
| 383 | ,, R. ஸ்ரீநிவாஸாசாரியர், ஜட்ஜ், புதுக்கோட்டை | 49—50 | 6 |
| 389 | ,, R. வீராஸாமி ஐயங்கார், தில்லஸ்தானம் | 49 | 3 |
| 456 | ,, லாலாபேட்டை தேசிகாசாரியர், தின்னனூர் | 48—50 | 9 |
| 466 | ,, P. ராகவாச்சாரியர், ஊத்துகுழி | 50 | 3 |
| 473 | ,, V. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மாம்பலம் | 50 | 3 |
| 501 | ,, D. T. அனந்தாசாரியர், தாமல் | 48—50 | 9 |
| 515 | ,, V. S. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீரங்கம் | 48—49 | 6 |
| 544 | ,, R. ராமஸ்வாமி ஐயங்கார், கல்யாண் | 49—50 | 6 |
| 596 | ,, S. R. ஸ்ரீநிவாஸாசாரியர், திருப்பனந்தாள் | 48—50 | 9 |
| 617 | ,, R. ஜகந்நாத ஐயங்கார், பூனா | 49—51 | 9 |
| 683 | ஸ்ரீமதி R. கமலம்மாள், தாமல் | 50 | 3 |
| 698 | ஸ்ரீ. V. G. துரைஸாமி ஐயங்கார், சென்னை | 49—50 | 5 |
| 699 | ,, P. T. ஸ்ரீநிவாஸாசாரியர், மயிலாப்பூர் | 50 | 3 |
| 701 | ,, K. கிருஷ்ணஸாமி அய்யங்கார், மயிலாப்பூர் | 50 | 3 |
| 712 | ,, M. வரதேதேசிகாச்சாரியர், திருவத்திபுரம் (N.A.) | 50 | 3 |
| 718 | ,, V. தேசிகாசாரியர், Rtd Dy. P. M. G. மயிலாப்பூர் | 47—50 | 12 |
| 737 | ,, K. S. R. ஆசார்யா, ஸிடி காலேஜ், சென்னை | 50 | 3 |
| 738 | ,, P. R. ரங்கஸாமி ஐயங்கார், அட்வொகேட் கோயம்புத்தூர் | 48—50 | 9 |
| 742 | ,, R. கிருஷ்ணன், Asst. Engineer, கிருஷ்ணகிரி | 49 | 3 |
| 766 | ,, K. A. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், கோனேரி ராஜபுரம் | 50 | 3 |
| 776 | ,, S. விஜயஸாரதி, தொட்டியபட்லா | 50 | 3 |
| 800 | ,, S. R. ரங்காசாரியர், பெரும்பாக்கம் | 50 | 3 |
| 806 | ,, U. திருவேங்கடாசாரியர், விழுப்புரம் | 50 | 3 |
| 826 | ஸ்ரீமதி ஐயம்மாள், ஸ்ரீரங்கம் | 49—50 | 6 |
| | | ஆக மொத்தம் ரூ. | 256 |

கீழ்க் கண்ட தொகைகள் அனுப்பப்பட்ட மணியார்டர் கூபன்களில் சந்தாதார் நம்பரோ அல்லது விலாஸமோ குறிக்கப்படவில்லை.

| வந்த தேதி | தொகை ரூ. | விபரம். |
|---|---|---|
| 18—8—50 | 6 | இதில் அனுப்பியவர் கையெழுத்துகூட இல்லை. |
| 21—8—50 | 6 | சந்தா நெ. குறிப்பிடப்படவில்லை. |
| 23—8—50 | தொகை இவ்வ | ஷை ளவு என்று குறிப்பிடப்படவில்லை. திருமலை அய்யங்கார் என்று மட்டும் கையொப்பம் செய்யப்பட்டிருக்கிறது. |

கிருபை செய்து இதன் விபரங்களைத் தெரிவிக்கும்படி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஸம்பாதகர்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

# ஸம்பாதகரின் குறிப்புகள்

𑌯𑍋 𑌮𑌗𑍍𑌨𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌙𑍍𑌮𑌨𑌸𑌂 𑌪𑍍𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑍁𑌂
𑌸𑌞𑍍𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌵𑌿𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌯𑌾𑌃 𑌸𑍍𑌵𑌯𑌾𑌤𑍍𑌰 ।
𑌸 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌹𑌸𑍍𑌤𑌧𑌾𑌰𑌣𑌪𑍍𑌰𑌵𑌣𑌚𑌕𑍍𑌰𑌧𑌾𑌰𑍀
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌗𑌤𑍋 𑌮𑌮 𑌭𑌵𑌤𑌿 𑌪𑌰𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌾𑌯 𑌤𑌸𑍍𑌮𑍈॥

**நமது மநோரதங்கள்**

சென்ற விரோதி ஹு புரட்டாசி மாஸத்து ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸஞ்சிகை வெளிவந்த சில நாட்களுக்கெல்லாம் நமது வாசக மஹாஶயர்களில் ஒரு ஸ்வாமி நமக்கு ஒரு கடிதமெழுதியிருந்தார். அந்த ஸ்வாமி ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவைத் தவருமல் படித்து இன்புறும் சிறந்த ரஸிகர்களில் ஒருவர். அவர் தமது கடிதத்தில் புரட்டாசி மாஸம் ஸ்ரீ தேசிகன் திருவவதாரம் செய்த மாஸ மாகையால் அம்மாஸத்திய ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஸஞ்சிகையானது ஸ்ரீ தேசிகன் மலராக இருக்கவேண்டு மென்றும், இப்படியே பல ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா அபிமாநிகளும் அபிப்ராயப்படுவதாயும், அடுத்த வருஷம் முதலாவது அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படவேண்டு மென்றும் தெரிவித்திருந்தார். இது ஒரு சிறந்த யோசனைதான். '𑌉𑌦𑌿𑌤𑌵𑍀𑌮𑍁𑌤𑌃𑌕𑌶𑍍𑌮𑌲𑌂 𑌦𑍃𑌶𑍍𑌮𑌲𑌂 𑌨𑌃' என்றபடி அத்விதீயமான ஒரு தர்ஶநத்தை ஸ்திரப்ரதிஷ்டித மாக்கி நமக்குத் தந்தருளிய அம்மஹாபுருஷனுடைய வைபவத்தையும் அவரது ஸ்ரீ ஸூக்திகளின் பெருமையையும் உலகத்தாருக்கு எடுத்துக் காட்டும் பல அரிய வ்யாஸங்களைக் கொண்ட ஒரு மலர் ப்ரதி வர்ஷமும் இம்மாஸத்தில் வெளிவந்து ஸ்வாமியின் திருவடிகளில் ஸமர்ப்பிக்கப்படவேண்டிய தென்பது மிகவும் யுக்தமே. மேலும் இம்மாதத்திலேதான் ஸ்ரீமத் ஆதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனது திருவவதாரமும். ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய திவ்ய நியமநப்படி ஒரு மஹா ஸ்தாநத்தை ஏற்படுத்தி, இக்கலியிலும் இன்றளவும் ஸத்ஸம்ப்ரதாய ப்ரவசநம் நிர்விக்நமாய் நடந்துவரும்படி செய்து ஸ்ரீ வைஷ்ணவ உலகை உஜ்ஜீவிக்கச் செய்த இம்மஹாசார்யனது பெருமையையும் அநுஸந்திக்கவேண்டியது நமது கடமைதான். எனவே இவ்விரண்டு ஆசார்ய வள்ளல்களின் பெருமைகளையும் கொண்டதாய் அம்மலர் அமைவதை யாவரும் விரும்புவர். நமது நண்பர் நமக்கு இந்த அபிப்ராயத்தை முன்னதாகவே தெரிவித்திருந்தும், பலவித அஸௌகர்யங்களால் இவ்வருஷம் அம்மாதிரி மலர் வெளிவர முடியாமற்போய்

விட்டதுபற்றி வருந்துகிறோம். மலரில் வெளிவரும் வ்யாஸம் ஒவ்வொன்றும் தனிச்சிறப்பு வாய்ந்ததாயும், இதுகாறும் வெளிவந்திருக்கும் வ்யாஸங்களைவிட விலக்ஷணமான வழியில் அபூர்வமான ரீதியில் அமைந்திருக்கவேண்டுமென்றும் நமது மநோரதம். இந்த நோக்கம் ஈடேறும் வகையில் வ்யாஸங்களை எழுதியனுப்புமாறு அந்தந்த வித்வான்களிடம் போதிய அவகாசத்துடன் ப்ரார்த்திக்க நமக்கு ஸந்தர்ப்பமில்லாமல் போனதுதான் முக்ய காரணம். அன்பர்கள் க்ஷமித்தருளவேணும். அடுத்த வருஷம் முதல் அம்மாதிரி மலரை வெளியிடுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் நடைபெறும். அவை ஸபலமாகும்படி ஶரண்யன் ஸங்கல்பிக்கவேண்டும்.

மற்றுமொரு அன்பர் தமது கடிதத்தில் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவை மாதமிரு முறை வெளிவரும் ஸஞ்சிகையாக ஆக்கவேண்டுமென்றும், அவச்யமானல் சந்தாவையும் அதிகமாக்கலாமென்றும் எழுதிவிட்டு, ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த ஸ்ரீ ந்யாயஸித்தாஞ்ஜநம், ஸ்ரீ ந்யாயபரிசுத்தி, தத்வமுக்தா கலாபம் ஸர்வார்த்தஸித்தி, ஶததூஷணீ முதலிய க்ரந்தங்களையும் தமிழில் மொழி பெயர்த்து எல்லோரும் தெரிந்துகொள்ளும்படி வெளியிடவேணுமென்று எழுதியிருக்கிறார். இவ்வளவு உத்ஸாஹம் நமது வாசகர்கள் அனைவருக்கும் இருக்குமேயாகில், இந்த யோசனைப்படி கார்யம் செய்ய இன்றே நாம் ஸித்தமாயிருக்கிறோம். ஆனால் நமது வாசகர்களில் சிலர், இன்னும் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா விஷயத்தில் வேண்டிய அளவு உத்ஸாஹம் காட்ட முன்வரவில்லையென்பதை நாம் வருத்தத்துடன் குறிப்பிடவேண்டியிருக்கிறது. இப்போது ஏற்படுத்தப்படிருக்கும் சந்தாவையே யதாகாலத்தில் அனுப்பிவைப்பதற்குச் சந்தாதாரர்களை நாம் அடிக்கடி ப்ரார்த்தித்து நினைவூட்ட வேண்டியிருப்பதால் சந்தாவை அதிகமாக்கி மாதமிரு முறை வெளிவரும் பத்ரிகையாக இதைச் செய்வதற்கு இப்போது ஸாத்யமில்லாமலிருக்கிறது. கால ஸ்திதிக்கேற்ப அச்சுக் கூலி பேபர் க்ரயம் இவைகள் மிகவும் அதிகமாயிருப்பதால், இப்பத்ரிகை வெளியாகும் செலவிற்கான தொகையில் பெரும் பாகம் ஸ்ரீ அழகிய சிங்கரால் தான் அநுக்ரஹிக்கப்பட்டு வருகிறது. சந்தா வஸூலை மட்டும் வைத்துக்கொண்டு பத்ரிகையை நடத்துவதென்பது முடியாத கார்யம். எனினும் சந்தாதாரர்கள் எல்லோரும் க்ருபை செய்து வருஷ ஆரம்பத்திலேயே சந்தாவை முன்னதாக அனுப்பிவைத்தால், பேபர் முதலியவைகளை மொத்தமாக லாபகரமான வகையில் வாங்க ஸௌகர்யம் உண்டாகி, இன்னும் கொஞ்சம் அதிகப் பக்கங்களுடன் ஸஞ்சிகையை அச்சிட ஸந்தர்ப்பமிருக்கும்.

ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த ஶாஸ்த்ர க்ரந்தங்களான ஸ்ரீ ந்யாய ஸித்தாஞ்ஜநம், ந்யாய பரிசுத்தி, தத்வமுக்தாகலாபம், ஸர்வார்த்த ஸித்தி, ஶத

தூஷணீ இவைகளைத் தமிழில் மொழி பெயர்த்து வெளியிடவேணு மென்ற அவா மற்றும் பல வாசகர்களுக்கு இருந்து வருவதாக அறிகிறோம். இது விஷயத்தில் ஒரு முக்யமான அம்ஸம் கவனிக்கப்பட வேண்டி யிருக்கிறது. ஸாஸ்த்ரத்தில் ஆழ்ந்த பரிசய மில்லாமல் ஸம்ஸ்க்ருதத்தில் வ்யுத்பத்தி நன்றாக இருப்பவர்களுக்கும்கூட, இந்த க்ரந்தங்களை யெல்லாம் அவற்றை நன்றாக ப்ரவசநம் செய்யக்கூடிய வித்வான்களிடம் நேரில் அப்யஸித்துத்தான் தெரிந்து கொள்ள முடியும். தாங்களாக வ்யாக்யாநத்தின் உதவியைக் கொண்டு அவற்றை முழுவதும் அறிந்துகொண்டுவிட முடியாது. அப்படி யிருக்கத் தமிழ் மொழி பெயர்ப்பின் மூலம் இந்த க்ரந்தங்களை எல்லோரும் தாங்களாக வாசித்துத் தெரிந்துகொண்டுவிட முடியு மென்று நினைப்பது ஸரியல்ல. ஆதலால் மூலத்திலுள்ள பங்க்திகளுக்கு ப்ரதிபதம் தமிழில் அர்த்தம் செய்து மொழி பெயர்த்து வெளியிடுவதால் அதிக ப்ரயோஜநம் ஏற்படாதென்றே நாம் நினைக்கிறோம். ஆனால் மூல க்ரந்தத்தை பல ப்ரகரணங்களாகப் பிரித்து, ஒவ்வொரு ப்ரகரணத்தையும் நன்றாக ஆராய்ந்து, அதிலுள்ள விஷயங்களை, ஸம்ஸ்க்ருத பாஷையில் பரிசய மில்லாதவர்களும், ஸாஸ்த்ர பரிபாஷையில் பயிற்சி பெறாதவர்களும் ஸுலபமாக அறிந்துகொள்ளும் வகையில் எளிய தமிழில் தொகுத்துப் புது நூலாக எழுதினால் அனைவருக்கும் உபயோகமாகு மென்பதே நமது அபிப்ராயம். இப்படி எழுதுவ தென்பது ஸுலபமான கார்ய மல்ல. அந்தந்த க்ரந்தத்தில் நிகரற்ற பாண்டித்யமும், வாசகர்களின் மனத்திற்கு அதிக ச்ரமம் கொடுக்காமல் விஷயங்களைத் தமிழில் சொல்லி விளங்கவைக்கும் திறமையும் அவர்களுக்கு வேண்டும். அதோடு புதிதாக ஸ்வதந்த்ரமாக எழுதப்படுவதால், அதில் ப்ரமாண ஸம்ப்ரதாய விரோதம் வராமலிருக்கும்படி மிக்க கவனத்துடன் எழுதப்பட வேண்டும். இவைகளை யெல்லாவற்றையும் கணிசித்து நமது வித்வான்கள் நம் ஸம்ப்ரதாயத்தின் ப்ரசாரத்தை உத்தேசித்து இக் கைங்கர்யத்தை மேற்கொள்ளவேண்டு மென ப்ரார்த்திக்கிறோம். அப்படி எழுதப்படும் க்ரந்தங்களில் சிறந்த க்ரந்தம் ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா மூலம் வெளியிடப்படு மென்று விஜ்ஞாபித்துக் கொள்ளுகிறோம்.

ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்த ஸ்தோத்ரங்களில் இன்னும் பலவற்றிற்கு அதிக விஸ்தார மில்லாமல் ஸரளமாக உரை யெழுதப்பட்டு, ரஸமான அர்த்த விசேஷங்களுடன் ஸஹ்ருதயர்கள் ரஸித்து அநுபவிக்கும்படி வெளியிட வேண்டி யிருக்கிறது. இன்னும் பல பூர்வாசார்ய க்ரந்தங்களும் வெளியிடப்பட வேண்டி யிருக்கின்றன. இது விஷயமாய் வேண்டியவற்றைச் செய்ய முயன்று வருகிறோம். நமது வித்வான்கள் இது விஷயத்தில் உதவி செய்ய முன் வரவேண்டு மென ப்ரார்த்திக்கிறோம்.